
# வீடு ஒரு பாடசாலையாக...









பெற்றோர்கள் 3–4 வயது உடைய பிள்ளைகளிற்கு வீட்டுச் சூழலில் கிடைக்கும் வாய்ப்புக்களை பிள்ளையின் விருத்திக்கான மகிழ்வான சந்தர்ப்பங்களாக மாற்றிப் பயன்படுத்திக் கொள்ள வழிகாட்டுவதே இந் நூலின் நோக்கமாகும்.







திருமதி.அ.வேதநாயகம்
(ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்.)

# அணிந்துரை

சமூகம் இன்று விரைவாக மாறிக்கொண்டிருக்கின்றது. அம்மாற்றத்திற்கேற்ப ஒவ்வொரு தனிமனிதனும் தனது செயற்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு உதவுவது கல்வியே ஆகும். இத்தகைய கல்வியானது ஒருவனுக்கு இளமையிலிருந்து திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். இதனால் இன்றைய நிலையில் முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. ஆயினும் முன்பள்ளிக்குழந்தைகள் மத்தியில் கல்வியைப்போதிப்பது என்பது முற்றிலும் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. அவர்களை கல்விச்செயன்முறைகளில் ஈடுபடுத்த வேண்டும். எனவே செயற்பாட்டுக் கல்வியே அவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது.

முன்னாள் யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவர். அத்துடன் அத்துறையில் அதிக ஈடுபாடு உள்ளவர். இதனால் இத்துறை சார்ந்த நூல்களை எழுத வேண்டுமென்ற உந்துதல் காரணமாக எழுந்ததே இந் நூலாகும். ஒவ்வொரு பிள்ளையினதும் தனித்தன்மையை நன்கு அறிந்தவர்கள் அவர்களது பெற்றோர்களே. அவர்கள் ஒவ்வொருவரதும் தன்மைக்கேற்ப அவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, கலந்துரையாடி, அவர்களின் ஆற்றலை மேம்படுத்தக்கூடியவர்கள் அவர்களின் பெற்றோர்களேயாவர். பிள்ளையின் மேம்பாட்டிற்கான பங்களிப்பை பெற்றோர்களிடம் அதிகரிக்க தூண்டும் வகையில் நடைமுறைப்பயன்பாடுள்ள நூலை அவர்கள் வெளியிட்டிருப்பது மிகவும் வரவேற்கக்கூடியதொன்றாகும். இந்நூல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மிகவும் முக்கியமானதாகும். இங்கு வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளே முதன்மைப்படுத்தப்பட்டுள்ள போதும் அவை அனைத்தும் ஒன்றிணைந்த செயற்பாடுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. முன்பள்ளி ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளை ஒன்றிணைந்த செயற்பாடுகளாகத் திட்டமிட இந்நூல் பெருந்துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்கள் மட்டுமல்லாது அவர்களோடு சேர்ந்து பெற்றோர்களும் தம் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொள்ளவேண்டியதன் அவசியத்தை இந்நூல் மூலம் வலியுறுத்தியுள்ளார். அதுமட்டுமல்லாது பெற்றோர்கள் குழந்தைகளுடன் சேர்ந்து செயற்படக்கூடிய செயற்பாடுகளை இலகு நடையில் மிகவும் தெளிவாக முன்வைத்துள்ளார். பெற்றோர்கள் இவ்விடயத்தில் கூடிய அக்கறை கொள்ளும்போதுதான் எதிர்காலத்தில் பிள்ளைகளின் கல்வியை திறம்பட முன்னெடுத்துச் செல்லமுடியும். இத்தகைய கருத்துக்களையெல்லாம் மிகவும் தெளிவாகவும் தனது அனுபவங்களினூடாகவும் அழகுற வெளியிட்டுள்ள முன்னாள் யாழ் வலயக்கல்விப்பணிப்பாளரின் சமூகப்பணி வரவேற்கத்தக்கதொன்றாகும். ஓய்வுக்காலத்தில் இத்தகைய முயற்சிகளை முன்நகர்த்தி வரும் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் சேவை பாராட்டுதற்குரியது. இது போன்ற சமூகப்பயனுள்ள பல நூல்களை அவர் வெளியிடவேண்டும் என்பது கல்வியுலகின் எதிர்பார்ப்பாகும்.

கலாநிதி திருமதி.ஜெ.இராசநாயகம்
சிரேஸ்ட விரிவுரையாளர்
கல்வியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி
# S.K. யோகநாதன் அவர்களின் ஆசியுரை

முன்பள்ளிக்கல்வித்துறை எமது பிரதேசத்தில் வளர்க்கப்படவேண்டிய நிலையிலேயே உள்ளது. சிறார்களின் அறிவு, திறன், தனியாள் தேர்ச்சி, நம்பிக்கை, சமூகப்பொறுப்புணர்வு என்பவற்றை விருத்தி செய்வதுடன் கற்றலுக்கு உறுதியான அடித்தளத்தை முன்பள்ளிக்கல்வியாலேயே ஏற்படுத்தமுடியும். முன்பள்ளிச்சிறார்களின் சமூகமனவெழுச்சி, பண்பாடு, உடல்-உள ஆரோக்கியம், ஆக்கத்திறன் விருத்தி, பிறர்மீது உடன்பாடான மனப்பான்மையை ஏற்படுத்தல் இக்கல்வியின் நோக்கமாகும்.

இந்நோக்கங்களைச் சரியாக இனங்காணவேண்டியவர்கள் முதலில் பெற்றோர்களே. இன்றைய நவீன முன்பள்ளிக்கல்வியில் பெற்றோர்களை ஈடுபடுத்தல் மிகமுக்கிய செயற்பாடாகவுள்ளது. இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்வுச்செயற்திட்டங்கள் எமது நாட்டில் போதுமானதாக இல்லை. இந்நிலையை நீக்கும் சிறப்பான முயற்சியை ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் மேற்கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார். முன்பள்ளிக்கல்வி அபிவிருத்தியில் முழுமையாக ஈடுபட்ட ஒரேயொரு கல்விப்பணிப்பாளராக இருந்து சேவையாற்றிய அவரது ஆளுமை, அர்ப்பணிப்பு, செயலாற்றல், அனுபவங்கள் எல்லாம் இந்நூலினூடாக வெளிவந்திருக்கின்றது.

மூன்று வயதான முன்பள்ளி சிறார்களிற்கு வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள் மிக எளிமையானதாக வழிகாட்டலுடன் கூடிய விடயங்கள் இந் நூலில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள் மிக எளிமையாக விளங்கி தமது பிள்ளைகளிற்கு செயற்படுத்தக்கூடிய விதத்தில் செயன்முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. முன்பள்ளிப் பருவ சிறார்களிற்கு பெற்றோர்களின் அரவணைப்பும், வழிகாட்டலுமே முதன்மையானது. அதனூடாகவே கற்றல் அனுபவங்களை சிறப்பாக வழங்க முடியுமென பல ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. அதற்கேற்ற விதத்தில் முதல்முறையாக இச் செயல்முறையை நடைமுறைக்கு கொண்டுவரும் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் முயற்சியை பாராட்டுகின்றேன். ஒவ்வொரு முன்பள்ளிகளிற்கும் சென்று பெற்றோர்களிற்கான விழிப்புணர்வுகளை ஒழுங்கமைத்து இந்நூலின் செயற்பாடுகளை விளக்கி விழிப்புணர்வூட்டி மிக உன்னதமான எதிர்காலப் பிரஜைகளாக முன்பள்ளிச் சிறார்களை ஆக்க எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் இத் துறை சார்ந்த நூல்களை வெளியிட்டு எமது பிரதேச முன்பள்ளிக்கல்வித் துறையை மேம்படுத்தும் வகையில் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் பணி சிறக்க இறையருளை வேண்டுகின்றேன்

**திரு.S.K.யோகநாதன்**

**பீடாதிபதி**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**

**கோப்பாய்**

# பதிப்புரை

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அம்மா, அப்பாவின் அரவணைப்புடனும், உறவினர்களின் பாதுகாப்புடனும் வீட்டிலே சிறப்பாக பராமரிக்கப்படுகிறது. சுத்தம், சுகாதாரம், உடல் ஆரோக்கியம் எல்லாவற்றிலும் அளவிற்கு அதிகமாக கவனம் எடுக்கிறார்கள். குழந்தை மூன்று வயதை அடைந்ததும் கற்றல் அனுபவங்களைப்பெற வேண்டும் என்ற பெரும் ஆவலுடன் முன்பள்ளிக்கு பெற்றோர்கள் அனுப்புகிறார்கள். பெற்றோர்கள் முன்பள்ளியிலேயே தமது குழந்தைகளின் செயற்பாடுகளை பொறுப்பளித்துவிட்டு தாம் பொறுப்பற்று வாழ்வதை அவதானிக்க முடிகிறது. பெற்றோர்களின் அளப்பரிய சொத்து அவர்களது குழந்தைகள்தான் என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. எனவே குழந்தையின் படிமுறை வளர்ச்சியில் பெற்றோர்கள் முழுமையான பங்காளர்களாக மாற வேண்டியது அவசியமாகிறது.

உங்களிற்கு உதவும் வகையிலே உங்கள் குழந்தைகள் மூன்று வயதை அடைந்ததிலிருந்து உடல் விருத்தி, உளவிருத்தி, அறிவாற்றல் விருத்தி என்பவற்றைப்பெற்று உங்களை மகிழ வைக்கும் வகையில் நீங்கள் எவ்வாறு செயற்பட முடியுமென வழிகாட்டும் வகையிலே இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெற்றோரும், வீட்டில் உள்ள குழந்தைகளிற்கு உதவுவோரும் இணைந்து எப்போது?, எதனை?, எப்படி? யார் செய்யப் போகிறார்கள்? எனக் கலந்துரையாடி, திட்டமிட்டு, பக்குவமாக, மகிழ்வாக, விளையாட்டாக முன்னெடுத்து வீட்டை ஓர் மகிழ்களமாக – பல்கலைக்கூடமாக மாற்ற இந்நூல் துணை செய்யுமென நம்புகிறேன். இதிலுள்ள ஒவ்வொரு செயற்பாடுகளையும் நீங்கள் கவனமாக வாசித்து உங்கள் குழந்தையின் அறிவாற்றல், பேசுசுத்திறன் என்பவற்றிற்கேற்றவாறு வசன அமைப்புக்களாக மாற்றியோ அல்லது வினாக்களாக மாற்றியோ செயற்பாடுகளைச் செய்யலாம். இயன்றவரை எளிமையான நல்ல மொழிநடையை பயன்படுத்துவதும் தெளிவாக உச்சரிப்பதும் பின்பற்றப்படல் வேண்டும். எங்கள் குழந்தையே எங்கள் வாழ்வு என எண்ணி அற்புதமாகச் செயற்படுவீர்கள் என நம்புகிறேன். மூன்று தொடக்கம் நான்கு வயதுப் பிள்ளைகளிற்கான செயற்பாட்டு முறைகளையே நான் இந்நூலினூடாகத் தந்துள்ளேன்.

திருமதி.அ.வேதநாயகம்
ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்

ஒரு பிள்ளை அவன், அவளது ஆளுமையின் பூரண மற்றும் இசைவாக்கமுள்ள விருத்தியையிட்டு மகிழ்ச்சி, அன்பு, புரிந்துணர்வு கொண்ட பின்னணியுள்ள குடும்பச் சூழலில் வளரவேண்டும்.

**UNCRE** இன் கட்டுரையிலிருந்து........

## வீடு ஒரு பாடசாலையாக......

## ஆரம்பப்பிள்ளைப் பருவம்

ஒரு குழந்தையானது கருக்கொண்ட காலத்திலிருந்து அக்குழந்தை பிறந்து ஐந்து வயது வரையுள்ள காலத்தையே ஆரம்பப்பிள்ளைப்பருவம் என்கின்றோம்.

ஆரம்பப் பிள்ளைப்பருவ காலம் முழுவதும் பிள்ளைக்கு மகிழ்வான சூழலை உருவாக்குவதும் அப் பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும், கற்றலிற்கான அனுபவங்களை பெற வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் அக் குழந்தையின் பெற்றோரினதும், அக் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரினதும் இன்றியமையாததொரு பொறுப்பாக அமைகின்றது.

ஒருபெண் தாய்மையடைந்த போதிலிருந்தே போதிய பாதுகாப்பும், கவனிப்பும் வழங்க வேண்டியது அவசியமாகின்றது. பிள்ளையின் முதற்கட்ட விருத்தியினை உருவாக்குவதில் தாயின் கருவறைச்சூழல் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. குழந்தை பிறந்ததும் தாயின் மடியே குழந்தையின் கற்றலிற்கான அனுபவங்களை வழங்கும் பாடசாலையாக காணப்படுகிறது. அடுத்த மூன்று வயதை அடையும்வரை குழந்தை வாழும் வீடு பாடசாலையாக அமைகின்றது. பிள்ளையின் வாழ்க்கையில் முதல் மூன்று வருடங்களும் மிக முக்கியமான பருவமென பல ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை காணலாம். மூன்று வயது தொடக்கம் ஐந்து வயதுவரை கற்றல் அனுபவங்களைப் பெறும் ஒரு மகிழ்வான நிலையமாக முன்பள்ளி அமைகின்றது. மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையான காலம் பிள்ளையின் விருத்தியில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றதொரு காலமாகத்திகழ்கின்றது.

மனித வாழ்க்கையில் வாழ்நாள் முழுவதும் ஏற்படும் எல்லா விருத்திகளையும் விட மூளையின் வளர்ச்சி முதல் சில ஆண்டுகளில் ஒப்பிடமுடியாதளவு அதிகமானதாகும். வாழ்க்கைக்காலம் முழுவதும் கற்றல் இடம்பெற்றாலும் பிள்ளைப்பருவத்தில் மூளை வளர்ச்சியுறும் வேகத்தை மீண்டும் ஒருபோதும் காணமுடியாது. எனவே ஆரம்பப்பிள்ளைப்பருவ அனுபவங்கள் மிகவும் முக்கியமானவையாகும். இதுவே முறையான பாடசாலைக்கல்விக்கான புகுநிலையாக அமைகின்றதைக் காணலாம். வெற்றிகரம்மிக்கதான ஆரம்பப்பிள்ளைப்பருவக் கற்றல் நிகழ்வுகள் முறையான பாடசாலையில் சாதனை படைக்கும் வெற்றிப்படிகளாக அமைவதை கண்கூடாகக் காண்கிறோம். இன்று முறையான பாடசாலைகளில் சாதனை படைக்கும் மாணவர்களை பாராட்டிக்கௌரவிக்கும் முதல் நிறுவனங்களாக அவர்களது முன்பள்ளிகள் விளங்குவதும் நீங்கள் அறிந்துகொண்டதேயாகும்

ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திக் காலத்தில் பிள்ளை பெற்றுக்கொள்ளும் நேர்த்தியான அனுபவங்கள் பிள்ளையின் தொடர் வளர்ச்சிக்கு எவ்வளவுதூரம் துணை நிற்கின்றது என்பதை இலகுவாக விளங்கிக்கொள்வதற்காக எனது கல்வி அபிவிருத்திக்கான பணிப் பயணத்தில் எதிர்கொண்ட ஒரு சம்பவத்தை குறிப்பிடலாமென நான் கருதுகின்றேன்.

வடக்குக்கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் ஆரம்பக்கல்விக்கும், ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திக்கும் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றியபோது ஒரு பாடசாலை மேற்பார்வைக்காக சென்றிருந்தேன். தரம் ஒன்றில் நான்கு பிரிவுகள், 135மாணவர்கள். அத்தனைபேரையும் பாடசாலை வளவினுள் பெரிய மாமரங்களின் நிழலிலே அழைத்துக் கலந்துரையாடி செயற்பாடுகளை அவதானித்து பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் பிரித்தேன். ஆசிரியர்களை அழைத்து,

குழு 1 : முன்பள்ளிக்கே செல்லாத மாணவர்கள்

குழு 2 : மிகவும் சிறந்த அனுபவங்களை வழங்கும் நல்ல முன்பள்ளிக்குச் சென்ற மாணவர்கள்

குழு 3 : ஒரு சாதாரணமான செயற்பாடுகள் நடைபெறும் முன்பள்ளிக்குச் சென்ற மாணவர்கள்

குழு 4 : எந்தக்கண்காணிப்பும் இல்லாத ஒழுங்குபடுத்தப்படாத பயிற்சி பெற்ற ஆசிரியரைக்கொண்டிராத முன்பள்ளிக்குச் சென்றவர்கள்

என ஆராய்ந்து தெரிவித்தேன். பின்னர் எனது இம் மதிப்பீட்டை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அப்பாடசாலை ஆசிரியர்களிடம் நான் குறிப்பிட்டிருந்தேன். முழுமையாக பதிவுகளிலிருந்து ஆராய்ந்த ஆசிரியர்கள் எனது இவ் மதிப்பீடு முற்றிலும் சரியானது எனத் தெரிவித்தனர்.

எனவே பிள்ளைகளுடன் தொடர்பில் இருப்பவர்கள் ஆரம்பப்பிள்ளைப்பருவ காலத்தில் எவ்வளவுதூரம் குழந்தைகளின் உடல், உள விருத்தியிலும், அறிவாற்றல் விருத்தியிலும் அக்கறை கொள்ளவேண்டும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர் .அதேநேரம் எமது பாரம்பரியக்கல்விமுறை அனுபவங்கள் இளஞ்சிறார்களிற்கு தீங்கு விளைவித்துவிடும். எனவே பிள்ளை விரும்பும் பரந்த அனுபவங்களைத்தரும் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து கற்றல் அனுபவங்களைப்பெற உதவுதல் வேண்டும். பிள்ளைகளுடன் விளையாடுதல், பிள்ளைகளைப்புரிந்து கொள்ளல், அன்பாக அரவணைத்துக் கற்றல் அனுபவங்களைப்பெறும் சூழலை அமைத்துக்கொடுத்தல் என்பன சக்திவாய்ந்த ஆரோக்கியமான பிள்ளை வளர்ப்பிற்கான உத்திகளாகின்றன.

## தரமான முன்பள்ளி

தரமான முன்பள்ளிகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக நீண்டதுாரத்தில் உள்ள முன்பள்ளிகளைத் தெரிவுசெய்வது பொருத்தமானதொன்றல்ல. பிள்ளைகள் நீண்டதுாரம் பயணம் செய்வதால் அவர்களது உடல் உள ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றதனை காணலாம். பிள்ளை களைத்து சோர்வடைவதால் மகிழ்வுடன் கற்றல் அனுபவங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. எனவே பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் வீட்டின் அருகிலே உள்ள முன்பள்ளிகளை தரமான முன்பள்ளிகளாக மாற்ற பெரும்பங்காற்றுதல் அவசியமானதாகும். பெற்றோர்கள் சமூகம் ஒன்றிணைந்து தமது கிராம முன்பள்ளியை பிள்ளைகள் விரும்பும் குதுாகலப் பூங்காவாக மாற்றியமைக்க முன்வருதல் வேண்டும்.

- ♣ முன்பள்ளிச்சூழல் பாதுகாப்பான இடமாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- ♣ சூழலை அழகானதாக பிள்ளைகள் விரும்பும் இடமாக மாற்றுங்கள்.
- ♣ முன்பள்ளியை ஆசிரியருடன் இணைந்து கற்றல் அனுபவங்களைப் பெறவல்ல சூழலாக மாற்றுங்கள்.
- ♣ திட்டமிட்ட காலஅட்டவணைக்கேற்ப ஆசிரியருடன் இணைந்து முன்பள்ளிச்செயற்பாடுகளில் பெற்றோரும் பங்கேற்றுக்கொள்ளுங்கள்.

- ♣ மேலதிக நேரத்தில் முன்பள்ளி ஆசிரியருடன் இணைந்து முன்பள்ளி அபிவிருத்திபற்றி கலந்துரையாடுங்கள், நடைமுறைப்படுத்துங்கள்.
- ♣ ஆசிரியரும் அர்ப்பணிப்புடன் செயற்படும் பெற்றோரும் சிறப்பாக இயங்கும் முன்பள்ளிகளிற் சென்று செயற்பாடுகளைப் பார்வையிடுங்கள். அவர்களுடன் கலந்துரையாடி விடயங்களை உள்வாங்கி உங்கள் முன்பள்ளிகளிற்கேற்றவாறு பயன்படுத்துங்கள்.
- ♣ முன்பள்ளியில் பயின்ற அனுபவங்களை முன்பள்ளிப்பிள்ளைகள் அரங்கேற்றும் நிகழ்வுகளான விளையாட்டு விழா, கண்காட்சி, கலைவிழா என்பன தரமானதாக அமைவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குங்கள்.
- ♣ ஒவ்வொருநாளும் முன்பள்ளி நேரம் முடிந்ததும் சுத்தம் செய்து மறுநாள் செயற்பாடுகளிற்காக முன்பள்ளியை ஒழுங்குசெய்ய உதவுங்கள்.
- ♣ பயிற்சி வகுப்புக்களில் முன்பள்ளி ஆசிரியர்கள் பங்குபற்ற உதவுங்கள்.
- ♣ முன்பள்ளி ஆசிரியர் நிறைவான சம்பளம் பெறுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- ♣ முன்பள்ளி ஆசிரியரின் தனிப்பட்ட சுகதுக்கங்களிலும் பங்கேற்றுக்கொள்ளுங்கள். இப்போது உங்கள் முன்பள்ளி மிகவும் தரமான முன்பள்ளியாக விளங்குவதைக்கண்டு நீங்களே வியப்படைவீர்கள்.

## வீட்டில் பெறும் அனுபவங்கள்

முன்பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் முன்பள்ளியை விட அதிக நேரத்தை வீட்டுச் சூழலிலேயே கழிக்கின்றார்கள். எனவே பிள்ளைகளின் பெற்றோர், குடும்பத்தவர் அனைவரும் பிள்ளை வாழும் வீட்டுச்சூழலை பல்வேறு அனுபவங்களைப் பிள்ளை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது. முன் பிள்ளைப்பருவ பிள்ளைகள் வீட்டில் பெறும் அனுபவங்களை கற்றல் அனுபவங்களாக மாற்றத்தக்க சூழலை வீட்டில் உருவாக்க வேண்டியது ஆரோக்கியமானது மட்டுமல்லாது காலத்தின் இன்றியமையாததொரு கட்டாய தேவையுமாகின்றது.

ஆரம்பப்பிள்ளைப்பருவம் எனும் பரந்துபட்ட விடயப்பரப்பிலே எனது காலை வைக்காது முன்பள்ளிக்குச்செல்ல ஆரம்பிக்கும் 3வயதைவிடக்கூடிய பிள்ளைகள் வாழும் வீடுகளை கற்றலிற்கான அனுபவங்களைப்பெறும் சூழலாக எவ்வாறு மாற்றி அமைத்துக்கொள்ளலாம்?, பிள்ளைகள் வீட்டில் கற்றல் அனுபவங்களைப்பெற வளர்ந்தோர் எவ்வாறு உதவி செய்யலாம்? என்பவை பற்றி சற்று சிந்திப்போம்.

ஒரு குழந்தை தான் பிறந்ததிலிருந்து சூழலோடொட்டி மெதுவாகவும், உறுதியாகவும் தொடர்புகொள்ள முனைகின்றது. அதன் மூலம் சூழல்க்காட்சிகள் மனதிலே படமாகப்பதிந்து விடுகின்றது. காலஞ்செல்லச்செல்ல இக்காட்சிகளால் அக்குழந்தையின் மனதிலே ஒருவிதக் கருத்து உருவாகி விடுகின்றது. இவை குழந்தையின் அறிவாற்றல் அபிவிருத்திக்கும் அடிப்படையான எண்ணக்கருவை ஏற்படுத்துகின்றது. இளமையிலே குழந்தைகள் தம்மைச்சூழவுள்ள உலகின் தகவல்களை தேடத் தொடங்குகின்றனர்.

தானாகவே ஆவலோடு தேட முனையும் அற்புதமும், அதிசயமும் நிறைந்த இந்த முக்கியமான இளமைக்காலத்தில் உறுதியானதும், ஆரோக்கியமானதுமான கற்றல் அனுபவங்களைப் பிள்ளை பெறுவதற்கு வழிகாட்டவேண்டிய தலைமைப்பொறுப்பினை தாய் தான் ஏற்கவேண்டும். தலைமைப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட தாய் இது ஒரு முக்கியமான பொறுப்பு என்பதை விளங்கிக்கொண்டு தனது குடும்ப உறுப்பினர்களை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகள் கூறும் கருத்துக்களை உன்னிப்பாக கேட்டு விளங்கி பதிலழிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

கற்றலை வழிப்படுத்தக்கூடிய ஒழுங்கினையும் சூழலினையும் வீடு கொண்டிருக்க வேண்டும். குழந்தையின் பெற்றோரும் குடும்பத்திலுள்ள ஏனையோரும் இதில் பங்குகொள்ள வேண்டியது அவசியமானதொன்றாகின்றது

பேசப்படுகின்ற மொழி, அங்குள்ளவர்களின் நடத்தை போன்றவற்றை பிள்ளை பின்பற்றுகின்றது என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இது மொழிவிருத்தியை மட்டுமல்லாது பிள்ளையின் பல்வேறு நடத்தையையும் உள்ளடக்குகின்றது.

## வீட்டுச்சூழலை ஒழுங்கமைத்தல்

- ♣ ஆரம்ப பிள்ளைப்பருவத்தில் பிள்ளை உள்ள வீடுகள்,முதலில் வீட்டின் உள்ளும் புறமும் பாதுகாப்பான சூழல் அமைந்திருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- ♣ குடும்பத்தவர்களின் நேரடிக்கண்காணிப்பில் பிள்ளை விளையாடவும்,செயற்படவும் ஏற்ற சுத்தமான பகுதியை வீட்டில் ஒழுங்கு செய்க.
- ♣ குடும்ப அங்கத்தவர் ஒன்றுகூடி கலந்துரையாடி நல்ல ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவதற்கும், பண்பான வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் உறுதியெடுத்துக் கொள்ளுங்கள்.
- ♣ புதிய உலகை அறிய ஆவலோடு இருக்கும் பிள்ளைக்கு எதையும் திணிக்காது பிள்ளையின் வழியிலே சென்று யார்? எப்போது? எவ்வாறு? உதவப்போகிறார்கள் என்பதை திட்டமிட்டு செயற்படுவது கூடிய பயனைத்தரும்.
- ♣ வீட்டில் பிள்ளையின் பகுதியில் பிள்ளை சுயமாக விளையாடுவதற்கு அல்லது செயற்படுவதற்கு தேவையான பொருட்களை உரிய இடத்தில் ஒவ்வொருநாளும் ஒழுங்கு செய்து வைப்பது அவசியமாகும்.
- ♣ குடும்பத்தவர்களுடன் இணைந்து செயற்படத் தேவையான பொருட்களையும் ஆயத்தம் செய்து வைப்பது பொருத்தமானது.

இதற்கெல்லாம் நேரமில்லையே என சிந்திக்கின்றீர்களா? உங்கள் பிள்ளையின் ஆரோக்கியமான வாழ்விற்காக நீங்கள் தேவையற்ற வழியில் செலவிடும் நேரத்தை குறைத்து இதற்காக பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஒரு பிள்ளையின் உயர்ந்த நிலையைப் பார்த்து மிகவும் உச்சமாக மகிழ்வடைபவர்கள் பெற்றோர்களே ஆவர். எந்தப் பெற்றோரும் தனது பிள்ளை நன்றாகவரக்கூடாது என்று நினைக்கமாட்டார்கள். ஆகவே உங்கள் பிள்ளைகள் உடலாரோக்கியமுடையவர்களாக சமூகம் விரும்பும் நல்ல மனப்பாங்குகள் உடையவராக வளர்ந்து மகிழ்வுடன் வாழ வழிகாட்டுவதற்கு தயாராகுங்கள். உங்கள் பிள்ளை ஆரம்பப்பராயத்தினை விருப்புடனும், மிக்க மகிழ்ச்சியுடனும் கழிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது பெற்றோராகிய உங்கள் கடமையாகும்.

ஒரு பிள்ளையின் உடல் உறுதியாக இருப்பின் அப்பிள்ளை அறிவாற்றல் செயற்பாடுகளில் நன்கு துலங்கும்.

சமூகமனவெழுச்சி ரீதியில் பலமுள்ளவராகவும், ஆர்வமுள்ளவராகவும் இருப்பின் புதிய புதிய செயற்பாடுகளிளெல்லாம் ஆர்வத்தோடு செயற்படுவர்.

உங்களிற்காக, உங்கள் பிள்ளைகளைகள் குதூகலித்துச்சிரித்து மகிழ்ந்து தனது பருவத்திற்கு ஏற்ற உடலாரோக்கியம் உடையவர்களாகவும், அறிவாற்றல் மிக்கவர்களாகவும், ஆக்கத்திறன் விருத்தி பெற்றவர்களாகவும், அத்துடன் சமூகமனவெழுச்சி விருத்தி பெற்றவர்களாகவும், வளர்வதற்கு உங்கள் வீட்டில் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கேற்ற வழிகாட்டலைச் செய்யும் நோக்கில் இந்நூலானது எழுதப்பட்டுள்ளது.

வீடும் அங்கு வாழ்வோரும் சேர்ந்து பிள்ளையின் ஆரம்பநிலைச் சூழலை உருவாக்குதல் வேண்டும். அதுவே பிள்ளை சூழலுடன் ஊடாட்டம் கொள்வதன் அடிப்படையாகவும் இருக்கும். சூழல் வழங்கும் வாய்ப்புக்களிலிருந்து, நன்மையடைவதற்குப் பிள்ளை சுதந்திரமும், பாதுகாப்பு உணர்வும் உடையதாக இருத்தல் வேண்டும். குடும்பச் சூழலின் முக்கியத்துவமும், மகிழ்ச்சி நிலவும் இயல்பும், அன்பு மற்றும் புரிந்துணர்வு போன்றவை பிள்ளைப்பராமரிப்பின் முக்கிய அம்சங்களாகும்.

**வீட்டின் முக்கிய பணி.......**

நீங்கள் உங்கள் பிள்ளை மூன்று வயதை அடைகின்றதென்றதும் முன்பள்ளிக்கு பிள்ளையை அனுப்புவதற்காக பெருமாரவாரம் செய்கிறீர்கள். அதேநேரம் வீட்டிலே உங்கள் பிள்ளைகளை மூன்று தொடக்கம் நான்கு வயதுவரை எவ்வாறு கவனிக்கப்போகின்றீர்கள்? அவர்களுடன் இணைந்து எத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடப்போகிறீர்கள்? பிள்ளைகள் சுதந்திரமாக செயற்படுவதற்கு என்ன முன்னாயத்தப் பணிகள் செய்யப்போகிறீர்கள்? எனச்சிந்திப்போம். முதலில் பரும்படியாக நீங்கள் கவனஞ்செலுத்த வேண்டிய சில விடயங்களைப் பட்டியற்படுத்தி சில செயற்பாடுகளை திட்டமிட்டு அவற்றைப்பற்றி ஆராய்வோம்.

01. பிள்ளையின் சுகாதாரமும் போசாக்கும்
02. வீட்டின் உள்ளும், புறமும் சுத்தமும் பாதுகாப்பும்
03. பிள்ளையிடம் சுய நம்பிக்கையை வளர்த்தல்
04. பெற்றோர், குடும்பத்தவர்கள் பண்பான வார்த்தைகளால் கலந்துரையாடல்
05. பிள்ளையின் திறன்கள் விருத்தியடைய உதவுதல்
06. பிள்ளை நல்ல மனப்பாங்கினை பின்பற்றும் வகையில் நடந்து கொள்ளல்
07. பிள்ளையிடமிருந்து துலங்கலைப்பெறும் வண்ணம் உரையாடல்களை மேற்கொள்ளல்
08. பிள்ளை விருப்புடன் செய்யும் நற்செயற்பாட்டிற்கு ஆதரவு, பாராட்டு வழங்குதல்
09. பிள்ளையின் முயற்சிகளை தடைப்படுத்தாது அவர்களது முயற்சிகளை மதித்தல்
10. அன்றாட செயற்பாடுகளில் பிள்ளைய்யை ஈடுபடுத்தல்
11. வேலையைச் செய்யும்போது பிள்ளையுடன் உரையாடல்
12. பிள்ளை வினாவும் வினாக்களிற்கு விடையளித்தல்
13. நமக்கு உதவுவோரை அறிந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்குதல்
14. வீட்டில் நிகழும் வைபவங்களில் பிள்ளையையும் பங்கேற்க வைத்தல்
15. பிள்ளை சுயமாக விளையாடுவதற்கு வசதியை ஏற்படுத்திக்கொடுத்தல்
16. புதிய சொற்களை பிள்ளை அறிந்து கொள்ள உதவுதல்
17. வீட்டில் உள்ளோர் சொற்களை சரியாக உச்சரித்தல்

18. பிள்ளை சூழலை அவதானிக்க உதவுதல், சூழலை விரும்பவும், மதிக்கவும், இரசிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும் என்ற உணர்வைப் பெற உதவுதல்
19. முன்பள்ளிக்கு பிள்ளையை உரியமுறையில் அனுப்புதல்
20. முன்பள்ளி ஆசிரியருடன் பிள்ளையின் விருத்திநிலை பற்றி கலந்துரையாடி வீட்டில் பிள்ளைக்கு உதவவேண்டிய விடயங்கள் பற்றி கற்றுக்கொள்ளல்

முன்பள்ளிக்கு அனுப்புகின்ற மூன்று வயதுப்பிள்ளைகள் தொடர்பாக நான்கு வயதுவரை வீட்டில் உள்ளோர் கூடிய கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் சிலவற்றை பார்த்தோம். முன்பள்ளிக்கு பிள்ளையை அனுப்பும் போது பெற்றோர் கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள்,

01. பிள்ளையை ஒழுங்காக முன்பள்ளிக்கு அனுப்புதல்
02. உரிய நேரத்திற்கு அனுப்புதல்
03. பாதுகாப்பாக அனுப்புதல்
04. பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பும்போது மகிழ்வான மனநிலையுடன் அனுப்பி வைத்தல்
05. சுத்தமாக அனுப்புதல்
06. போசாக்கான காலை உணவு உண்டபின் அனுப்புதல்
07. கொதித்தாறியநீர் கொடுத்து அனுப்புதல்
08. தொற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஏற்ற பராமரிப்பிலும், முன்னேற்பாட்டிலும் கவனம் எடுத்தல்
09. உரிய நேரத்திற்கு பிள்ளையை வீட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்தல் (பொறுப்பற்ற முறையில் வேறு எவருடனாவது பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்புவதோ திரும்ப அழைத்துவர ஒழுங்கு செய்வதோ தவிர்க்கப்படல் வேண்டும்)

## உடல் அபிவிருத்தி

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பார்கள். எனவே பிள்ளைகள் நல்ல தேகசுகம் உள்ளவர்களாக வளர்ந்தால்த்தான் பெருஞ்சாதனைகளை படைக்கலாம். பெற்றோர்கள் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடித்தால் பிள்ளைகளும் அதனைப்பின்பற்றுவர். நடைமுறைச்சுகாதாரம், சத்துணவு தொடர்பான புதிய தகவல்களை பொதுச்சுகாதார தாதிமார் (PHM) உடன் அடிக்கடி தொடர்புகொண்டு அறிந்து பிள்ளையின் உயரம், நிறை, போசாக்கு, பாதுகாப்பு போன்றவற்றிற்கு உதவுவதை பெற்றோர் வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். உரிய காலத்தில் தடுப்பூசிகளைப்போட வேண்டும்.

பிள்ளையின் வளர்ச்சி ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். இவ் வளர்ச்சி ஆளுக்காள் வேறுபடுகின்றது. அசைதல், ஓடுதல், பாய்தல், கெந்துதல், வீசுதல், ஏறுதல், குனிதல் போன்றன குழந்தைகளின் இயற்கையான செயற்பாடுகளாகும். இச்செயற்பாடுகளினால் பிள்ளையின் தலை, கை, கால், உடல்த்தசைநார்கள் வலுவுள்ளதாகவும் உறுதியானதாகவும் விருத்தியடைகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இயல்பாகவே செயற்படுகின்ற செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு பதிலாக ஓடாதே, பாயாதே, கெந்தாதே, வீசாதே, ஏறாதே, குனியாதே எனத்தடை செய்வதில் வல்லவர்களாக உள்ளனர். தமது பிள்ளைகளின் உடல் விருத்தியடைவதை இவர்கள் விரும்பவில்லையா? என வினா எழுகின்றது.

பேரியக்கவிருத்தி செயற்பாடுகளினாலேயே பிள்ளைகளின் உடல்த்தசைநார்கள் வலுவுள்ளதாகவும், உறுதியுள்ளதாகவும் விருத்தியடைகின்றன. இளமைக்காலம் என்பது குழந்தைகளுக்கு மிக மிக முக்கியமானதாகும். அவர்களிற்கு ஏற்ற உடல்விருத்திச் செயற்பாடுகளிற்கு அவர்களின் பெற்றோர்களின் ஊக்குவித்தலானது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

மூன்று தொடக்கம் நான்கு வயது பிள்ளைகளிடம் ஊக்குவிக்கக்கூடிய பேரியக்கவிருத்திச் செயற்பாடுகள்

- ♣ கால்களை மாற்றி மாற்றி வைத்து மேலும் கீழும் நடத்தல்.
- ♣ ஓடும்போதும் நடக்கும்போதும் கை, கால்களின் அசைவுகளை இணைப்பாக்குதல்.
- ♣ சாய்வுகளில் மேலும் கீழும் நடத்தல்.
- ♣ இரு கைகளாலும் மெதுவாக வீசும் பொருளைப் பிடித்தல்.
- ♣ கால் விரல் நுனியால் நடத்தல்.

எதையும் திறமையாகக் கையாளும் திறன்தான் வாழ்க்கைக்கு அவசியமானதாகும். தசைநார்கள் விருத்தியடைந்தால் எதனையும் திறமையாகக் கையாளும் திறன்களைப் பெறலாம். உடலின் புலனுறுப்புக்களைக் கட்டுப்படுத்தி இயைபாக்கம் பெறலாம். முறைசார் கற்றற்செயற்பாடுகள் தொடங்கமுன் கண், காது, கை, கால், விரல், நாக்கு போன்ற உடல் உறுப்புகளின் தசைநார்கள் விருத்தியுறவேண்டும். அப்போது தான் பேச்சு, வாசிப்பு, எழுத்து போன்ற முறையான கற்றல் திறன்கள் விருத்தியடையும். அத்துடன் பிள்ளையின் முழுவளர்ச்சிக்கு பொருத்தப்பாடான திறமையினையும், தன்நம்பிக்கையினையும் பெருக்குவதற்கு நுண்ணியக்கத்திறன் விருத்திச் செயற்பாடுகள் மிகச் சிறந்தது.

மூன்று தொடக்கம் நான்கு வயது பிள்ளைகளிடம் ஊக்குவிக்கக்கூடிய நுண்ணியக்கத்திறன் விருத்திச் செயற்பாடுகள்.

- ♣ கடதாசியை துண்டுதுண்டாக கிழித்தல்.
- ♣ கையினால் வெண்கட்டியை பிடித்து வரைதல்.
- ♣ நிறந்தீட்டும் தூரிகையைப்பிடித்து நிறந்தீட்டுதல்.
- ♣ கத்தரிக்கோலைப் பயன்படுத்தல்.
- ♣ உருவங்களினுள் ஒட்டுதல்.
- ♣ ஒரு வடிவத்தை பதிதல்.
- ♣ ஒரு வடிவத்தை சுற்றி வரைதல்.
- ♣ முழுமையடையாத உருவத்தை கீறி முடித்தல்.
- ♣ பற்களைத் துலக்குதல்.
- ♣ சட்டைப் பொத்தான்களைப் பூட்டல், திறத்தல்.
- ♣ ஒரு கோப்பையை தூக்கிச் செல்லல்.
- ♣ உணவு பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவுதல்.
- ♣ மண்களி அல்லது கிளேயை பிசைந்து உருவம் செய்தல்.

அறிவாற்றல் விருத்தி

அறிவாற்றல் அபிவிருத்தி சூழலிற்கேற்ப பொருந்துதல், ஒன்றித்தல், இணக்கமாக இருத்தல் ஆகியவற்றிற்கூடாக ஏற்படுகிறது. அதன் மூலம் மனதிற் சூழற்காட்சிகள் படமாகப் பதிந்துவிடுகிறது. காலம் செல்லச்செல்ல இக்காட்சிகளால் மனதிலே ஒருவிதக் கருத்து உருவாகிவிடுகிறது. இவை அறிவாற்றல் அபிவிருத்திக்கும் அடிப்படையான எண்ணக்கருவை ஏற்படுத்துகின்றது. இளமையிலே குழந்தைகள் தம்மைச்சூழவுள்ள உலகின் தகவல்களைப் பெறத் தொடங்குகின்றார்கள்.

உளவியல்ரீதியாகக் கூறின் எண்ணக்கரு அபிவிருத்திக்கு இரண்டு முக்கியமான காரணிகள் தேவை.

√ உள்ளார்ந்த ஊக்கிகள்

√ இணக்கமான வெளிச்சூழற் சந்தர்ப்பங்கள்

தனிப்பட்ட குழந்தைகளின் எண்ணக்கருவளர்ச்சி, அவர்களது வயது, மனம் ஆகியவற்றின் படிமுறை வளர்ச்சிக்கேற்ப நிகழும். எண்ணக்கருவும் அதனை வெளியிடும் மொழியாற்றலும் அவர்களது செயற்பாடுகள் மூலம் பரிணமிக்கின்றது. ஆகவே எண்ணக்கரு அபிவிருத்தி, பொருத்தமான பயிற்சிகள், அனுபவங்கள் ஊடாக தூண்டி விடப்படல் வேண்டும்.

பொதுவாக பிள்ளைப்பருவத்தில் எண்ணக்கரு அபிவிருத்தியை மூன்றுபருவமாக நிரல்ப்படுத்தலாம்.

- உளவியக்கவாற்றல் பருவம் - 0-2 வயது
- முன் எண்ணக்கரு பருவம் - 2-4 வயது
- உள்ளுணர்வுப் பருவம் - 4-7 வயது

உளவியக்கவாற்றல் பருவம் (0 - 2)

பிள்ளை தன்பக்கமுள்ள சூழலில் சிறிதளவு பிரித்தறிந்து கொள்ளும்.

முன் எண்ணக்கரு பருவம் (2 - 4)

இப்பருவத்தில் பிள்ளை சூழலில் காணப்படும் பல பொருட்களை இனங்கண்டு கொள்ளும். இப்பருவத்திலேயே மொழியும் விருத்தியுறும்.

உள்ளுணர்வுப் பருவம் (4 - 7)

இப்பருவத்திலேயே முறையான எண்ணக்கரு உருவாகும்.

அறிவாற்றல் விருத்தியில் மொழி விருத்தி, கணித எண்ணக்கரு விருத்தி, சூழலை விளங்கிக் கொள்ளும் விருத்தி ஆகியன அடங்கும். ஒரு பாடப்பரப்பின் விருத்தி ஏனைய பாடங்களின் விருத்தியோடு தொடர்புடையதாக இருக்கும். ஆகவே ஒரு விடயத்தைக் கருப்பொருளாக எடுத்து பொருத்தமான விதத்தில் ஒன்றிணைந்த அனுபவங்களைப்பெற வாய்ப்பினை வழங்குதல் வேண்டும்.

மூன்று வயது தொடக்கம் நான்கு வயதினர் மொழிவிருத்திக்கான எதிர்பார்ப்புக்கள்

- ♣ குறைந்தது 600 - 900 சொற்களஞ்சியத்தை விளங்கிக் கொள்ளுதல்.
- ♣ விளையாடும்போது தனக்குள்தானே பேசிக்கொள்ளல்.
- ♣ தைரியம் வந்தபோது பிறருடன் பேசுதல்.
- ♣ ஏன்? எதற்கு? எப்படி? என்ன? எங்கே? யார்? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் ஆவல்.
- ♣ தன் சூழலிலே நடப்பவற்றை அவதானித்து விழிப்புணர்வு கொள்ளுதல்.
- ♣ மற்றப்பிள்ளைகளை பார்த்து விளங்கி நடிக்கத் தயார்ப்படுத்தல்.
- ♣ சில நேரங்களில் சேர்ந்து விளையாடி செயற்பாடுகளில் ஈடுபட்டாலும், தனிமையில் விளையாட விரும்புதல்.
- ♣ மகிழ்வாக இசையோடு அசையவும், தாளம் போடவும் விரும்புதல்.
- ♣ பொம்மைகள், படப்புத்தகம் என்பவற்றை விரும்புதல்.
- ♣ கதைகள் கேட்கவும் பாடல்கள் பாடவும் கேட்கவும் விரும்புதல்.
- ♣ மணலை குவித்து விளையாடவும், உருவங்கள் செய்யவும் வீட்டுத்தளபாடங்கள் உருவாக்கவும் விரும்புதல்.
- ♣ இறந்தகாலம், நிகழ்காலம் போன்ற ஓரளவு கால எல்லைகளை அறிதல்.
- ♣ விரைவாக விளங்காவிட்டாலும் நிகழும் சம்பவங்களை எந்தநேரத்தில் நடந்தது என அறிதல்.
- ♣ சிறு வசனங்களை நான்கு வயதளவில் பேசுதல்.
- ♣ அடிப்படைச் சொற்களை பயன்படுத்தி தேவையானவற்றை விளக்குதல்.
- ♣ போலச்செய்தலில் ஆர்வம் காட்டுதல்.

## மூன்று தொடக்கம் நான்கு வயதினர் கணிதவிருத்திக்கான எதிர்பார்ப்புக்கள்

கணிதம் என்றால் இலக்கங்களைக் கற்பது மட்டுமே என பலரும் கருதுகின்றனர். ஆனால் உள்ளுணர்வுப் பருவமான 4 வயதின் பின்னரான பருவத்திலேயே முறையான எண்ணக்கரு உருவாக்கம் பெறுகின்றது. எனவே 4 வயதின் பின்னர்தான் இலக்கங்கள் கட்டங்கட்டமாக அறிமுகம் செய்தல் வேண்டும். 4 வயதின் முன்னர் பல பிள்ளைகள் இலக்கங்களைத் தொடர்ச்சியாக சரியாக சொன்னாலும் அவ் இலக்கங்களின் பெறுமானத்தை சரியாக விளங்கி கொள்ளமாட்டார்கள்.

எனவே 3 - 4 வயதுப் பிள்ளைகளிற்கு கணித முன் எண்ணக்கருக்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற உதவுதல் வேண்டும்.

> 3-4 வயதுப்பிள்ளைகள் உண்மைப்பொருட்களுடன் கூடிய செயற்பாடுகளில் கணித முன் எண்ணக்கருவிருத்தியைப்பெற சந்தர்ப்பம் வழங்குவதே மிகப்பொருத்தமானதாகும்.

மனித வாழ்வின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் கணிதஅறிவு எந்நேரமும் பயன்படுத்தப்படுகின்றதனை காணக்கூடியதாக உள்ளது. அதனால் பிள்ளைகள் வீட்டிலேயே முன்பள்ளிப்பருவத்திற்கு முன்பே முன்கணித எண்ணக்கருக்களுக்கு பொருத்தமான சில அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் எல்லாக்குழந்தைகளும் சமமான மட்டத்தில் கணிதம் சார்ந்த அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள் என நாம் எதிர்பார்க்கமுடியாது. ஒவ்வொரு குழந்தையும் வாழும் சூழல், கிடைக்கும் சந்தர்ப்பங்கள் என்பவற்றின் அளவிற்கேற்ப அவர்கள் பெறும் கணிதம் சார் அனுபவங்கள் வேறுபட்டிருப்பதைக் காணலாம். எனவே ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோரும் வீட்டில் தமது பிள்ளை விளையாட்டுக்கள் மூலமாகவும், செயற்பாடுகள் மூலமாகவும், தொடர்பாடல்கள் மூலமாகவும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கனிவோடும், பாசத்தோடும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும்.

> ஒரே நேரத்தில் ஒரு தலைப்பில் குறித்த புதிய கணித எண்ணக்கரு விருத்திக்கான செயற்பாடுகளைச் செய்யத் தூண்டுவது பொருத்தமானதாகும். மேலதிகமாக ஏற்கனவே பிள்ளைக்கு பரிட்சயமான விடயங்களைச் சேர்த்துக்கொள்ளவும்.

### கணிதவிருத்திக்கான எதிர்பார்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| இணங்காணல் | : | பரிட்சயப்பட்ட பொருளை இனங்காண சந்தர்ப்பம் வழங்குதல் |
| தெரிதல் | : | சுயமாக விளையாடி இருபொருட்கள் கொண்ட கூட்டத்திலிருந்து ஒரு வகைப்பொருளைத் தெரிந்தெடுத்தல் |
| வகைப்படுதல் | : | ஒரு இயல்பில் மட்டும் வேறுபடும் இருதொகுதி பொருட்களை வேறுபடுத்த சந்தர்ப்பம் வழங்குதல் |
| வரிசைப்படுத்தல் | : | மூன்று பொருட்களை ஒழுங்குபடுத்த சந்தர்ப்பம் வழங்குதல் (வெவ்வேறு உயரமுடைய 3 பாவைகள்) |
| ஒன்று ஒன்றிற்கான தொடர்பு | : | உதாரணம் :- போத்தல் - மூடி<br>சப்பாத்து - காலுறை<br>போன்ற பொருட்களை வழங்கி தொடர்பு எனும் எண்ணக்கருவிற்கான அனுபவம் பெற சந்தர்ப்பம் வழங்கல். |

வடிவம் : சதுரம், முக்கோணம், வட்டம்

சமச்சீர் : சமச்சீர் பெறக்கூடிய தள உருவங்கள், வடிவங்களை வழங்கி அவற்றை மடித்து விளையாட சந்தர்ப்பம் வழங்கல்

அயல் : கிட்ட - தூர
முன் - பின்
மேல் - கீழ்
எனும் எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குக.

மாறின்மை : ஒரே அளவான இரு பாத்திரங்களை வழங்கி ஒரு பாத்திரத்தினால் மணல் அல்லது நீர் பயன்படுத்தி மற்றப்பாத்திரத்தை நிரப்பி விளையாட சந்தர்ப்பம் வழங்குதல்.

அளத்தல் :

1). நீளம் :- வெவ்வேறு நீள அளவுள்ள தடிகள், ஈர்க்குகள் பயன்படுத்தி
நீண்ட, குறுகிய
உயரம், கட்டை
என்பதை இனங்காண சந்தர்ப்பம் வழங்குதல்.

2). நிறை :- விளையாட்டுத்தராசு ஒன்றைப்பயன்படுத்தி விளையாடச்சந்தர்ப்பம் வழங்குக

பரப்பளவு : ஒரே அளவான சதுரம், செவ்வகத் துண்டுகளைப்பயன்படுத்தி தரையிலே அடுக்கி விளையாடச் சந்தர்ப்பம் வழங்குக.

கன அளவு :

1). கனவுரு, சதுரமுகிக் கட்டைகளை பெட்டி ஒன்றில் அடுக்க வழிப்படுத்துக
2). வெவ்வேறு அளவுள்ள பாத்திரம்/சிரட்டை என்பவற்றை பயன்படுத்தி மண்பிட்டு செய்ய வழிப்படுத்துக
3). வெவ்வேறு அளவுள்ள பாத்திரங்களைக் குவளை ஒன்றால் நிரப்ப வழிப்படுத்துக (மணல், நீர் பயன்படுத்துக)

காலம் :

1). காலை, இரவு நேரங்களில் நிகழும் சம்பவங்களை கலந்துரையாடி காலங்களை வெளிப்படுத்துக
2). படங்களைக் காட்சிப்படுத்தி
- காலைக்காட்சி
- மாலைக்காட்சி
- மழை போன்றவற்றை அவதானிக்க சந்தர்ப்பம் வழங்கி கலந்துரையாடுக

முழுவதும் அரைவாசியும் : முழுமையான பொருட்கள், அவற்றின் பாதிகள் என்பவற்றை கையாளவும், பாதிகளைப் பொருத்தி முழுப்பொருளைப் பெறவும் சந்தர்ப்பங்களை வழங்குக
(பாண், கொய்யாப்பழம், தேசிக்காய்)

கோலங்கள் : இலையும் பூவும்
1இலை, 1பூ, 1இலை, 2பூ என்றவாறு கோலங்கள் அமைத்து விளையாட வழிப்படுத்தவும்.

புதிர் விளையாட்டு :
1). திண்ம உருவங்களைப் பொருத்தலும் வேறாக்கலும்
2). தளவடிவங்களைப்பயன்படுத்தி உருவங்கள் அமைத்தல்
3). இருபகுதிகளாக்கப்பட்ட உருவங்களைப் பொருத்துதல்
இவற்றிற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்

பணம் :
1). வெவ்வேறு நாணயக்குற்றிகளுடன் விளையாடவிடல்
2). 2 வேறு அளவான நாணயங்களைக்கொண்டு கோலம் அமைத்தல்
3). ஒரேவகை நாணயங்கள் பயன்படுத்தி வடிவங்கள்அமைக்கவிடல்
4). உண்டியலில் காசு போடுதல்

எண்கள் : 10 வரை சுயாதீனமாக எண்ணுதல்

## சூழலைப் புரிந்துகொள்ளல்

சூழலென்பது எம்மைச்சூழவுள்ள மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், வீட்டில் உள்ள பொருட்கள், கட்டிடங்கள் அனைத்தையும் குறித்து நிற்கின்றது. குழந்தை தனது ஐம்புலன்களின் ஊடாகவே சூழலைக்கண்டு அறிந்து விளங்கிக்கொள்கிறது. சூழலின் எல்லாக்கூறுகளும் பிள்ளைகளின் கவனத்தை ஈர்த்து பொருத்தமான கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. விலங்குகளின் ஒலிகள், வாகன ஒலிகள் புதுமையானவையாக அவதானிக்க ஆர்வம் காட்டுகிறது. மழை, வெயில், இடிமுழக்கம், வெளிச்சம், காற்று, வெப்பம், குளிர் ஆகிய புதுமைகளை அறிய ஆர்வம் காட்டுவர். சிறு சுற்றுலாக்கள் மூலம் பல்வேறு சூழலை நன்கு அவதானித்து அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன.

பிள்ளைகள் மணல், கற்கள், தண்ணீர், களி, பூக்கள், சிப்பிகள், இறகுகள், சிரட்டை போன்ற பொருட்களோடு விளையாடும்போது ஆராய்ச்சி செய்பவர்களாகவும், அவதானிப்பவர்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும் ஆகிவிடுவார்கள். பிள்ளையின் இயற்கை ஆர்வத்தை அவதானிக்கும் பெரியவர்கள், பிள்ளைகள் வினாவும் வினாக்களைச் செவிமடுத்து பதிலளிக்கவேண்டும். பெரியவர்கள் பிள்ளைகளிடம் வினாக்களைக் கேட்பதன்மூலம் அவர்களின் ஆர்வத்தைத்தூண்ட வேண்டும்.

பிள்ளைகள் தமது நாளாந்தச்செயற்பாட்டினூடாக பெற்றோர், உறவினர்கள், சமூக அங்கத்தவர்கள், பல்வேறுசேவைகளை வழங்குவோர்(தபாற்காரர், வைத்தியர்) ஆகியோருடன் தொடர்புறுகின்றனர். இதனால் பல்வேறு சமூகத்திறன்களைக் கற்றுக்கொள்கின்றனர். விழுமியங்கள், உறவுமுறைகள், சேவைவழங்குவோர் தொடர்பாக அறிந்துகொள்கின்றனர். சமூகச்சூழலில் மனப்பாங்கு விருத்தியடைகின்றது. மொழித்திறன் வளம்பெற்று விருத்தியடைகிறது. எனவே பிள்ளைகளிடத்தே நல்ல மனப்பாங்கு வளர சமூகத்தொடர்பு கவனமாக கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

## சூழல்சார் விருத்திக்கான எதிர்பார்ப்புகள் (3-4 வயது)

* வீட்டில் வாழ்பவர் - அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, சகோதரர்
* மிருகங்கள் - நாய், பூனை, ஆடு, மாடு
* பறவைகள் - கோழி, காகம், குருவி, கிளி, மயில்
* வீட்டில் உள்ள பொருட்கள்- விளையாட்டுப் பொருட்கள், பாவனைப் பொருட்கள்
* தாவரங்கள் - மரங்கள், செடிகள், கொடிகள்
* வாகனங்கள் - துவிச்சக்கரவண்டி, பஸ், கார், புகையிரதம்........
* எமக்கு உதவுவோர் - தபாற்காரன், வைத்தியர், மீன்காரர்........
* இயற்கைத்தோற்றங்கள் - மழை, வெயில், காற்று, மின்னல்.......
* இடங்கள் - தோட்டம், கோயில், கடை, சந்தை.......
* சமூக கலாச்சாரநிகழ்வுகள் - புது வருடம், பொங்கல், நத்தார், பிறந்தநாள்....

பிள்ளைகளின் அண்மித்த சூழலுடன் இணைந்ததாய் கருப்பொருட்கள் சில இங்கு தரப்பட்டுள்ளன. பிள்ளைகள் வாழும் சூழலிற்கேற்ப கருப்பொருட்களை தேடிப்பெறுவது உங்கள் பொறுப்பாகும்.

## செயற்பாடுகள்

பெற்றோர்களே!

உங்களிற்கு உதவுவதற்காக இங்கு சில செயற்பாடுகள் தரப்படுகின்றது. பிள்ளை வாழும் சூழலிற்கேற்ப வாய்ப்புக்கள், தேவைகள் வேறுபடும். பிள்ளைகளின் ஆக்கத்திறன் விருத்திக்கேற்ப செயற்பாடுகளை தெரிவுசெய்ய வேண்டியிருக்கும். தரப்பட்ட செயற்பாடுகளை உதவியாகக்கொண்டு உங்கள் பிள்ளைக்கு பொருத்தமான செயற்பாடுகளை வடிவமைத்து பயன்படுத்துவது உங்கள் பொறுப்பாகும். இந்த வகையில் மணல் விளையாட்டுக்கள், நீர் விளையாட்டுக்கள் பிள்ளை நிறைய அனுபவங்களைப் பெற வாய்ப்பளித்துநிற்கும் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

உங்கள் பிள்ளையின் பேச்சுத்திறன் விருத்திக்கேற்ப செயற்பாடுகளின்போது செயற்பாடு தொடர்பான எளிமையான சிறிய வினாக்களை வினாவி பிள்ளையின் விடைகளிற்கு ஏற்ப கலந்துரையாடலை முன்னெடுத்துச்செல்வது பொருத்தமானதொன்றாகக் காணப்படுகின்றது.

(செயற்பாடுகளில் அம்மா எனக்குறிப்பிடப்படுவது பிள்ளையின் விருத்திக்கான செயற்பாடுகளிற்கான தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட தாயினால் பொறுப்பளிக்கப்பட்ட குடும்ப உறுப்பினரைக் குறிக்கும்.)




## செயல் விளக்கம் :

- குடும்பத்தவர்கள் எல்லோருக்கும் "Good Morning" சொல்லுதல் (பபா "Good Morning")
- Ø பபா மலசலகூடத்தில் (Toilet) மலங்கழித்துவிட்டு சோப் போட்டு கை கழுவுங்கோ.
- அக்காவோடு போய் பல்துலக்கி முகம் கழுவுங்கோ.
- ஈரத்தை நன்றாக துவாயால் துடையுங்கோ
- சாமி கும்பிடுங்கோ. அக்காவோடு சேர்ந்து தேவாரம் பாடுங்கோ
- ஓடி வாங்கோ. பால் குடியுங்கோ
- மேசையிலிருந்து படப்புத்தகம் படியுங்கோ
- 7 மணிக்கு அக்காவோடு போய் குளியுங்கோ
- அம்மா சாப்பாடு தருகிறேன். சாப்பிட்டு முன்பள்ளி போக சட்டை போடுங்கோ
- அக்கா கொதித்தாறிய நீர் பபாவினுடைய போத்தலில் எடுங்கோ
- அம்மா பிள்ளையை முன்பள்ளியில் கொண்டுபோய் விடுகிறேன்
- பபா முன்பள்ளி ரீச்சர் சொல்வதை கேட்டு கவனமாகச் செயற்பட வேண்டும்
- முன்பள்ளி விட்டவுடன் அம்மா கூட்டிக்கொண்டுபோக வருகிறேன்
- நல்ல பிள்ளையாக இருக்கவேண்டும். ரீச்சர் பபாவை நல்லபிள்ளை என்று சொல்லவேண்டும்

செயற்பாட்டிலிருந்து.........

| | | |
|---|---|---|
| ❖ | உடலபிவிருத்தி | – தசைநார் பயிற்சி |
| ❖ | மனவெழுச்சி விருத்தி | – மகிழ்வு, தற்துணிவு, தன்னார்வம் |
| ❖ | சூழல் சார் விருத்தி | – நற்பழக்கம், தனியாள் சுகாதாரம் |
| ❖ | கணித எண்ணக்கரு விருத்தி | – 7 மணி |
| ❖ | மொழி விருத்தி | – கிரகித்துத் துலங்குதல், சொற்களஞ்சிய விருத்தி, படப்புத்தகம் வாசித்தல் |




## செயல் விளக்கம் :

- நிலம் தூசி இல்லாமல் சுத்தம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பிள்ளையின் கையில் பழைய சுத்தமான துணியொன்றைக் கொடுக்கவும். அம்மாவும் துணியொன்றை எடுத்துக்கொள்ளவும்
- நாங்கள் இந்த நிலத்தைத் துடைத்து பளபளப்பாக்குவோம் எனக்கூறி நிலத்திலிருந்து முன்னால் வளைந்து நிலத்தில் கைகளை வைத்துத் துடைத்தல். இடம் வலம் திரும்பித்துடைத்தல். பின்னால் சென்று மீண்டும் துடைத்தல்
- நன்றாகக் களைத்து விட்டோம். கொஞ்சநேரம் ஓய்வெடுத்துக்கொள்வோம்.
- பிள்ளை வடிவாக துடைத்திருக்கிறா. பளபளப்பாக இருக்கிறது. கெட்டிக்காரி. வீடு சுத்தமாக இருந்தால் வருத்தமும் வராது. சந்தோசமாக இருக்கும்.
- இன்னும் கொஞ்சம் துடைப்போம். தொடர்ந்து துடைத்தல். அம்மாவும் பிள்ளையும் கெட்டிக்காரர்கள். கஸ்ரப்பட்டு வேலை செய்திட்டோம். பிள்ளையினது அறை அழகாக இருக்கிறது.
- நாளைக்கு அம்மாவின் அறையைத்துடைபபோம்

செயற்பாட்டிலிருந்து......

- உடலபிவிருத்தி – தசைநார் பயிற்சி
- மனவெழுச்சி விருத்தி– வீட்டைச்சுத்தமாக வைத்திருத்தல், தன்னம்பிக்கை, சந்தோசம்
- சூழல் சார் விருத்தி – நற்பழக்கம், சுகாதாரம்
- கணித எண்ணக்கரு விருத்தி – முன், பின், கொஞ்சநேரம், பரப்பளவு
- மொழி விருத்தி – கிரகித்துத் துலங்குதல், சொற்களஞ்சிய விருத்தி, கலந்துரையாடல்



# செயற்பாடு- 03 : பந்து விளையாடுவோம்

## செயல் விளக்கம் :

- பிள்ளை விளையாடக்கூடிய பாரம் குறைந்த பிளாஸ்ரிக்பந்தை பயன்படுத்துக. பிள்ளை விரும்பும் குடும்ப உறுப்பினர் ஒருவருடன் விளையாடலாம்.
- சுத்தமான நிலத்தில் பிள்ளையிலிருந்து ஏறத்தாழ 5 அடி தூரத்தில் அம்மா இருக்கலாம்
- பந்தை பிள்ளை இரு கைகளாலும் பிடிக்கக்கூடியவாறு நேராக உருட்டவும்
- அம்மா பந்தை உருட்டுகிறேன் பிள்ளை பந்தை பிடியுங்கோ, பிடியுங்கோ பிள்ளைக்கு பிடிக்க கஸ்ரமாக இருக்கிறதா? கிட்ட வரட்டா? என உரையாடி பந்தைப்பிடிக்க ஊக்குவிக்கவும்.
- பபா அம்மாவுக்கு பந்தை நேரே உருட்டுங்கோ. அம்மா பந்தைப்பிடித்து விட்டேன். பபா பிடியுங்கோ, பிடியுங்கோ. "Very Good" கெட்டிக்காரி.
- உருண்டையான பந்து உருண்டு உருண்டு வருகுதென்ன? (5 அல்லது 6 தடவை விளையாடி தூரத்தைக்கூட்டலாம்)
- பபா நான் கொஞ்சத்தூரம் போகட்டா? இப்ப பந்தைப்பிடியுங்கோ பார்ப்பம். கெட்டிக்காரி.
- 5 அல்லது 6 தடவை விளையாடவும். பிள்ளை விரும்பினால் எழுந்து நின்று பந்தை எறிந்து கவனமாக விளையாடுக.

செயற்பாட்டிலிருந்து......

- உடலபிவிருத்தி – தசைநார் பயிற்சி
- மனவெழுச்சி விருத்தி– மகிழ்ச்சி, நம்பிக்கை, காப்புணர்வு
- சமூக விருத்தி – மற்றவர்களிற்கு உதவுதல், இணைந்து செயற்படல்
- கணித எண்ணக்கரு விருத்தி – நேராக, கிட்ட, தூர
- மொழி விருத்தி – கிரகித்துத் துலங்குதல், சொற்களஞ்சிய விருத்தி, இரசித்தல், கலந்துரையாடல்



# செயற்பாடு- 04 :
# படம் பார்த்து மகிழ்வோம்

## செயல் விளக்கம் :

- வீட்டில் பிள்ளையின் பகுதியில் அழகான பிள்ளையின் படம் ஒன்றை பார்வைக்கு ஏற்றவாறு தொங்கவிடுக.
- பிள்ளை தனதுபடத்தை பார்க்கும் போதெல்லாம் தன்னைப்பற்றிய ஓர் உயர்வான எண்ணம் தோன்றும். தான் பெறுமதியான ஒருவர் என்ற நம்பிக்கை ஏற்படும்.
- பிள்ளையுடன் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி குடும்பத்தவர்கள் இணைந்து எடுத்த அழகான ஒரு படத்தையும் அருகில் தொங்கவிடுக.
- இப் படத்தை பார்க்கும் போதெல்லாம் தான் தனியாள் இல்லை. எனக்கு அம்மா, அப்பா, உறவினர்கள் நிறையப்பேர் உள்ளார்கள். இவர்கள் எல்லோரும் என்னில் அன்புள்ளவர்கள், என்னை கவனிப்பார்கள், நான் பாதுகாப்புடன் வாழமுடியும். என்ற நம்பிக்கை ஏற்படும்.

- பிள்ளையை அன்போடு அரவணைத்து நாங்கள் படம் பார்ப்போம். எல்லாரையும் கூட்டிவாங்கோ.

  அப்பா அம்மா வாங்கோ<br>
  தாத்தா பாட்டி வாங்கோ<br>
  அண்ணா அக்கா வாங்கோ<br>
  படம் பார்க்க வாங்கோ (தாளத்துடன் பாட்டு)

- எல்லாரையும் பிள்ளையின் அறையில் இருக்க சொல்லுங்கோ.
- எல்லோரும் பாருங்கோ இது யாருடைய படம்?எங்களுடைய பிள்ளை எவ்வளவு வடிவாக இருக்கிறா.
- சட்டையும் நல்ல அழகாக இருக்கிறது. சப்பாத்தும் நல்ல வடிவாக இருக்கிறது.
- பபா! இந்தச் சட்டை பிள்ளைக்கு யார் வாங்கித்தந்தது?
- சப்பாத்து பிள்ளைக்கு யார் வாங்கித்தந்தது? பிள்ளையை யார் படம் எடுத்தது?
- பபா கெட்டிக்காரி தானே?
- இப்ப இந்தப் படத்தை பாருங்கோ.
- ஒவ்வொருவரையும் தொட்டுக்காட்டி பபாவிடம் இது யார் எனக் கேட்கவும்.
- இவர்கள் எல்லோரும் பபாவில் நல்ல விருப்பம்.
- இன்றைக்கு அம்மா பிள்ளைக்கு என்ன செய்தவா? அப்பா என்ன தந்தவர்?
- தாத்தா என்ன சொன்னவர்? பாட்டி என்ன செய்தவா? அண்ணா என்ன செய்தவர்?
- அக்கா என்ன செய்தவா?

அன்றையதினம் திட்டமிட்டு ஒவ்வொருவரும் வினாக்களிற்கேற்ப செயற்பாடுகளைச் செய்திருக்கவேண்டும். (அப்பா - அப்பிள், தாத்தா - கதை, பாட்டி - பாட்டு, அண்ணா - பொம்மை, அக்கா - பிள்ளையோடு விளையாடினவா, அம்மா - குளிக்கவாத்து அச்சாச் சட்டை போட்டு விட்டவா.)

- பிள்ளைக்கு எல்லோரிலும் நல்ல விருப்பமா?

செயற்பாட்டிலிருந்து......

- உடலபிவிருத்தி – ஓடுதல், கையில் பிடித்து அழைத்து வரல்.
- மனவெழுச்சி விருத்தி – மகிழ்வு, காப்புணர்வு, நம்பிக்கை
- சூழல் சார் விருத்தி – எமக்கு உதவுவோர், உறவுமுறை
- கணித விருத்தி – உறவுமுறை, ஒன்று - ஒன்றுக்கான தொடர்பு
- மொழி விருத்தி – செவிமடுத்து இரசித்தல், துலங்குதல், கலந்துரையாடல், எண்ணங்களைவெளிப்படுத்தல், பாடல்பாடுதல், சொற்களஞ்சியவிருத்தி
- சமூக விருத்தி – குடும்ப உறவினரை மதித்தல்
- அழகியல் விருத்தி – அழகை இரசித்தல், பாடுதல்



# செயற்பாடு- 05 : குளிப்போம்



## செயல் விளக்கம் :

- பபா வாங்கோ குளிக்க, இந்தச் சட்டை போடுவோமா? துவாயையும் எடுத்து வாங்கோ.
- பேபி சோப்பை கிட்ட எடுத்து வையுங்கோ.
- பேசின் நிறைய நீர் இருக்கு
- பேசினுக்குள்ளே இருங்கோபார்ப்பம் என்ன நடக்குது என்று.
- அம்மா தண்ணீர் வெளியே......
- பபா தண்ணீருக்குள்ளே இருக்க தண்ணீர் வெளியே போகிறது.
  (நீருக்குள்ளே கைகள், கால்கள் அடித்து விளையாட விடுக.)
- பபா சோப் போடுவோம். வெளியே வாங்கோ.
- கால், கை, உடம்பு எல்லாம் சோப் போடுங்கோ. அப்பதான் அழுக்கெல்லாம் போகும்.
- அம்மா காது, மூக்கு, எல்லாம் கவனமாக போட்டு கழுவி விடுகிறேன்.
- வாளியிலிருந்து கோப்பையாலை அள்ளிக் குளியுங்கோ.
- இப்ப அம்மா குளிக்க வார்க்கிறேன்.
- ஈரத்தை துடைப்போம், வடிவாய்த்துடைப்போம்.
- பவுடர் போடுவோம், நல்ல சட்டை போடுவோம், பொட்டு வைப்போம், தலை சீவுவோம்
- அப்பாடா பிள்ளை எவ்வளவு வடிவாக இருக்கிறா.
- நாங்கள் குளிச்சு, நல்ல சட்டை போட்டு, தலை சீவி, சுத்தமாக இருந்தால் வடிவாக இருக்கலாம். வருத்தமும் வராது.

செயற்பாட்டிலிருந்து......

- ❖ உடலபிவிருத்தி – நடத்தல், பொருட்கள் எடுத்துச் செல்லல், பேசின் உள்ளே, வெளியே செல்லல், நீருள் அடித்து விளையாடல், சோப் போடல், கோப்பையால் அள்ளிக் குளித்தல், துடைத்தல்.
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்வு, நீரில் விளையாடல், காப்புணர்வு, தன்னம்பிக்கை
- ❖ சுகாதாரம் – சுத்தமாக இருந்தால் நோய் வராது.
- ❖ கணித எண்ணக்கரு விருத்தி – உள்ளே, வெளியே, நிறைய
- ❖ மொழி விருத்தி – கிரகித்துத் துலங்குதல், சொற்களஞ்சிய விருத்தி, எண்ணத்தை வெளிப்படுத்தல், கலந்துரையாடல்
- ❖ விஞ்ஞான எண்ணக்கரு – உள்ளே இருக்கும் போது நீர் வெளியேறல், சோப் அழுக்கைப் போக்கும்
- ❖ அழகியல் விருத்தி – இரசனை



# செயற்பாடு- 06 : சுயாதீனமாக கிறுக்குவோம்

## செயல் விளக்கம் :

- அம்மா பிள்ளையின் அருகிலிருந்து வெள்ளை நிறத்தாளில் நிறச்சோக்கால் கீறவும்
- பபா அம்மா வெள்ளைப்பேப்பரில் கீறுகிறேன்
- நிறச் சோக்கால் கீறுகிறேன்
- சிவப்பு நிறத்தால் கீறுகிறேன்
- இனி பச்சை நிறத்தாலை கீறப்போகிறேன்
- பபா உங்களிற்கும் கீற விருப்பமா?
- இந்தாங்கோ வெள்ளைப் பேப்பர்
- விருப்பமான நிறங்களால் கீறுங்கோ
- பேப்பர் நிறையக் கீறுங்கோ
- அம்மாவும் பேப்பர் நிறையக்கீறுகிறேன்
- பபாவினுடைய படத்திற்குள்ளே இதோ ஒரு பூனைக்குட்டி தெரியுது
- இது முகம் - சிறிய வட்டம்
- இது உடம்பு - பெரிய வட்டம்.
- இது வால் - வளைந்திருக்குது
- முகத்தில் கண் வைப்போமா? எத்தனை கண்கள் வைப்போம்?
- இரண்டு கண்கள்
- மூக்கும் வைப்போம் - ஒரு மூக்கு
- மீசை வைப்போம்
- நிறந்திட்டுவோம். என்ன நிறம்?
- மண்ணிறம்
- சரி. நிறத்தைத்தீட்டுங்கோ
- கறுப்புக் கண் வைப்போம்
- அப்பாடா. அச்சாப் பூனைக்குட்டி
- பபா நல்ல கெட்டிக்காரி. பபா கீறியதுதான் நல்ல வடிவாக இருக்கிறது
- தாத்தா, பாட்டிக்கு காட்டிக்கொண்டு வாங்கோ.
- தாத்தா, பாட்டி பாராட்டுதல்
- இரண்டு படத்தையும் தொங்கவிடுவோம்.
- பபா சோக்கெல்லாம் எடுத்து வைத்துப்போட்டு வாங்கோ

### செயற்பாட்டிலிருந்து.......

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | — | தசைநார்ப்பயிற்சி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | — | மகிழ்ச்சி, தன்னம்பிக்கை, காப்புணர்வு |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | — | வெள்ளை, நிறைய, பச்சை, கறுப்பு,மண்ணிறம், உள் |
| ❖ மொழி விருத்தி | — | எழுத்து முன்பயிற்சி, செவிமடுத்து துலங்கல் |
| ❖ அழகியல் விருத்தி | — | ஆக்கத்திறன் விருத்தி, - சித்திரம் அழகை இரசித்தல் |




## செயல் விளக்கம் :

அம்மா சமைப்பதற்காக தேங்காய்ப்பாலை பிழிந்து விட்டு பூவை வைக்கிறா. பார்த்துக்கொண்டிருந்த பிள்ளை அம்மாவை போல் தானும் பூவை எடுத்து பிழிந்தால் அம்மாவிற்கு கோபம் வந்து விடும். பிள்ளைக்கு அடித்துவிட்டு தேங்காய்ப்பூவை பறித்து உயரத்திலை வைத்துவிடுவா பிள்ளை அழும். விரக்தி அடையும். இத்தகைய செயற்பாடுகள் பிள்ளையின் மனவெழுச்சி விருத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். அது பிள்ளையின் அறிவு விருத்தியிலும் தடையாக இருக்கும். எனவே பிள்ளையின் விருத்தியில் பாதகமாக அமையும் சந்தர்ப்பங்களை வீட்டிலுள்ளோர் தவிர்த்தல் வேண்டும்

- பிள்ளையை உற்சாகப்படுத்தி பிள்ளை தேங்காய்ப்பூவை பிசைந்து விளையாட ஊக்குவித்தல் வேண்டும்.
  - பபா தேங்காய்ப்பூவை பிழியுங்கோ.
  - நன்றாகப் பிசைந்து பிழியுங்கோ.
  - கீழே கொட்டாதையுங்கோ.
  - கொஞ்சத் தண்ணீர் விட்டு பிழியுங்கோ.
  - பிழிஞ்ச பூவை தட்டிலை எடுத்து வையுங்கோ.
  - பால்வடியை வைத்து பாலை வடியுங்கோ.
  - திரும்பவும் பூவை நன்றாகப் பிசையுங்கோ.
  - தேங்காய்ப்பூவை இந்த தட்டிலை பரவி காயவிடுங்கோ.
  - பின்நேரம் படம் ஒட்டுவோம்.
  - மஞ்சள், நீலம் கலந்து நிறப்படம் ஒட்டுவோம். எனக் கலந்துரையாடி பிள்ளை சந்தோசமாக செயற்பட அம்மா ஊக்குவிக்கவேண்டும்.

**செயற்பாட்டிலிருந்து.......**

- உடலபிவிருத்தி — தசைநார்விருத்தி
- மனவெழுச்சி விருத்தி — மகிழ்ச்சி, நம்பிக்கை
- கணித எண்ணக்கருவிருத்தி — கொஞ்சம், பரப்பளவு எண்ணக்கரு, பின்னேரம்
- மொழி விருத்தி — கிரகித்துத் துலங்குதல், சொற்களஞ்சிய விருத்தி, எழுத்து முன் பயிற்சி , கலந்துரையாடல்



# செயற்பாடு- 08 : கொய்யாப்பழம் பிடுங்குவோம்

## செயல் விளக்கம் :

- பபா வாங்கோ கொய்யாப்பழம் பிடுங்குவோம்
- மரத்தில் நிறைய காய்த்திருக்கிறது
- பழம் இருக்குதோ பாருங்கோ
- ஒன்று, இரண்டு, மூன்று
- ஒரு பழத்தை அணில்ப்பிள்ளை தின்கிறார்

அணில் பிள்ளை அணில் பிள்ளை என்ன செய்கிறீர்
அழகான கொய்யாப்பழத்தை அரித்துத் தின்கிறேன்'

(அணில்.....)

- அணில் பிள்ளை வடிவாக இருந்து சாப்பிடுகிறார்
- மற்ற இரண்டு கொய்யாப்பழத்தையும் பிடுங்குவோம்
- ஒன்று பபாவிற்கு
- மற்றது அம்மாவிற்கு
- பபாவிற்கு எட்டுதோ தொங்கிப்பாருங்கோ
- நுனிக்காலில் நின்று எட்டிப் பிடுங்குங்கோ
- பழத்தை கழுவி சாப்பிடுவோம்
- கொய்யாப்பழம் நல்ல ருசியாக இருக்கிறது என்ன?
- அப்பா வர கொய்யாப்பழம் பிடுங்கின கதையைச்சொல்லுங்கோ

**செயற்பாட்டிலிருந்து......**

- உடலபிவிருத்தி — தொங்குதல், நுனிக்காலில் நிற்றல், சுகாதாரம்
- மனவெழுச்சி விருத்தி — மகிழ்ச்சி, நம்பிக்கை
- கணித எண்ணக்கருவிருத்தி — ஒன்று, நிறைய, இரண்டு, ஒரு பழம், மற்ற இரண்டு
- மொழி விருத்தி — கிரகித்து துலங்கல், சொற்களஞ்சியவிருத்தி, கதைகூறல்
- அழகியல் விருத்தி — பாட்டு, இரசனை
- சூழல்சார் விருத்தி — மரம், காய், பழம், அணில்



# செயற்பாடு- 09 : தபால் வாங்குவோம்.

## செயல் விளக்கம் :

- மணி அடிக்குது. தபால் வந்திருகிறது
- பபா வாங்கோ தபால் வாங்குவோம்
- தபால் மாமா தபால் கொண்டுவந்திருக்கிறார்
- பபா வாங்குங்கோ
- தபால் மாமா நல்லவர். எங்களுக்கு உதவி செய்பவர். வீட்டிற்கு தபால் கொண்டுவந்து தருவார்
- இரண்டு தபால்கள்
- ஒன்று பெரிது. மற்றது சிறிது
- பபா இருங்கோ. தபாலைப்படிப்போம்
- பெரிய தபால் அப்பாவுக்கு பாங்கில் இருந்து வந்திருக்கிறது
- கவனமாக அப்பாவிடம் கொடுங்கோ
- சிறிய தபால் கொழும்பில் இருந்து வந்திருக்கிறது
- பெரியம்மா அனுப்பியிருக்கிறா
- பபாவிற்குத்தான் எழுதியிருக்கிறா
- அன்புள்ள மதுராக்குட்டிக்கு,

  நல்ல சுகமாக இருக்கிறீர்களா?
  அழகாக இருக்கிறீர்களா?
  நேரத்திற்கு சாப்பிடுகிறீர்களா?
  அம்மா அப்பாவிற்கு உதவி செய்கிறீர்களா?
  மதுராவிற்கு ஒரு சட்டை வாங்கியிருக்கிறேன்.
  அழகான மஞ்சள் நிறச்சட்டை.
  நான் வரும்போது கொண்டு வருகிறேன்
  மதுராவைப்பார்க்க ஆசையாக இருக்கிறது.

  இப்படிக்கு
  அன்புள்ள
  பெரியம்மா

**செயற்பாட்டிலிருந்து.....**

- ❖ உடலபிவிருத்தி – நடத்தல், ஏறுதல், இறங்குதல், தபால் வாங்குதல்
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, நம்பிக்கை
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – பெரிது, சிறிது, ஒன்று, இரண்டு, நேரம்
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், கடிதக்கருத்து
- ❖ சூழல்சார் விருத்தி – எமக்கு உதவுவோர், தபால்காரன், உறவுமுறை




## செயல் விளக்கம் :

பிள்ளை குளித்து, நல்ல சட்டை போட்டு, பொட்டு வைத்து, தலை சீவி, இருக்கும் போது,

- பபா ஓடி வாங்கோ.
- பபா கண்ணாடியிலை பாருங்கோ
- பொட்டு வைத்திருக்கிறிங்களா பாருங்கோ.
- பபா வடிவாக இருக்கிறிங்களா?
- பபா இந்தக் கிளிப்பை தலையில் குத்துங்கோ.
- இப்ப கண்ணாடிக்கு கிட்ட நடந்து போங்கோ.
- கண்ணாடியிலையும் பபா கிட்ட வாறா.
- கண்ணாடியிலிருந்து தூரப் போங்கோ.
- கண்ணாடியிலையும் பபா தூரப் போறா.
- கைகளை நீட்டுங்கோ.
- கண்ணாடியிலை பாருங்கோ.
- கைகளைத் தட்டுங்கோ.
- கண்ணாடியிலை பபா என்ன செய்கிறா?
- கண்ணாடியிலை பபாக்கு கைகொடுங்கோ பார்ப்பம்?
- கொடுக்க முடியாது............

பபா ஒவ்வொருநாளும் காலை நேரம் வடிவாகக் குளித்து ஈரம் துடைத்து பவுடர் பூசி அச்சாசட்டை போட்டு, பொட்டு வைத்து, தலைசீவி, அழகாக கண்ணாடியிலை பார்க்க வேண்டும். சுத்தமாக, வடிவாக இருந்தால் தான் மற்ற பிள்ளைகள் பபாவுடன் சந்தோசமாக விளையாடுவார்கள். நோய்களும் வராது.

**செயற்பாட்டிலிருந்து......**

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – | உடற்பயிற்சி, சுகாதாரம் |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – | மகிழ்ச்சி, தனனம்பிக்கை |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – | தூர, கிட்ட, காலை நேரம் |
| ❖ மொழி விருத்தி | – | கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், கதை கேட்டல் |
| ❖ அழகியல் விருத்தி | – | இரசனை, ஆக்கத்திறன் |
| ❖ விஞ்ஞான எண்ணக்கரு விருத்தி | – | விம்பம் எண்ணக்கரு |




# செயற்பாடு- 11 : பூ மரத்திற்கு நீர் ஊற்றுவோம்

## செயல் விளக்கம் :

- ➢ பபா நாங்கள் பூமரங்களிற்கு தண்ணீர் ஊற்றுவோம்
- ➢ பூமரங்களிற்கு தண்ணீர் ஊற்றாவிட்டால் பூமரங்கள் வாடிப்போகும். இலைகள் வாடும், பூக்கள் பூக்காது
- ➢ ஓடிவாங்கோ. தண்ணீர் ஊற்றுவோம்
- ➢ கவனமாக படியில் இறங்குங்கோ
- ➢ மெதுவாக ரப்பை(Tap) திறவுங்கோ
- ➢ நீலநிற பைப்பை மெதுவாக இழுத்துவாங்கோ
- ➢ அம்மா பிள்ளைக்கு உதவி செய்கிறேன்
- ➢ அந்த பெரிய மரத்திற்கு தண்ணீர விடுங்கோ
- ➢ மல்லிகைக்கொடிக்கும் தண்ணீர் விடுங்கோ
- ➢ நிறைய மல்லிகைப்பூக்கள் பூத்திருக்கு
- ➢ மல்லிகைப்பூ நல்ல வாசம்
- ➢ மணந்து பாருங்கோ
- ➢ மல்லிகைப்பூ என்ன நிறம்?
- ➢ வெள்ளை நிறம்
- ➢ சின்னச்சின்னப்பூக்கள்
- ➢ றோசாச்செடிக்கும் நீர் விடுவோம். றோசாச்செடிகளை நேருக்கு நட்டிருக்கிறோம்
- ➢ றோசாச்செடிகள் பூத்திருக்கோ பாருங்கோ? நல்ல வடிவான பூக்கள் என்ன?
- ➢ பிள்ளைக்கு எந்தப்பூ விருப்பம்
- ➢ இந்தச்சிவப்பு பூவா? நல்ல பெரிய பூ. பிள்ளைக்கு இந்தப்பூவை தலையில் வைப்போம்
- ➢ தண்ணீர் ரப்பை மூடுங்கோ. றோசாப்பூவை அம்மா பிடுங்குகிறேன். றோசா செடியில் முள் இருக்கிறது
- ➢ படியில் ஏறிப்போய் மேசையில் உள்ள கிளிப்பை எடுத்து வாங்கோ
- ➢ கெட்டிக்காரி. திரும்புங்கோ. தலையில் பூ வைக்க
- ➢ பபா நல்ல வடிவாக இருக்கிறா. ஓடிப்போய் கண்ணாடியைப்பாருங்கோ.

### செயற்பாட்டிலிருந்து......

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – | ஓடுதல், நடத்தல், இறங்குதல், ரைப்திறந்து மூடல்,இழுத்தல் |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – | மகிழ்ச்சி, நம்பிக்கை, மனநிறைவு, பங்கேற்றல் |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – | பெரிய, சிறிய, நீலம், சிவப்பு, நிறைய, ஒரு, நேருக்கு |
| ❖ மொழி விருத்தி | – | கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், எண்ணத்தைவெளியிடல் |
| ❖ அழகியல் விருத்தி | – | இரசனை, ஆக்கத்திறன் |
| ❖ சூழல்சார் விருத்தி | – | மரம், செடி, கொடி, பூக்கள் |



# செயற்பாடு- 12 : வீட்டு மரம் செய்வோம்

## செயல் விளக்கம் :

இலைகள் நீக்கிய அழகிய மரக்கிளை ஒன்றை எடுத்துக்கொள்க. ஒருவாளி, மணல் ஆகியவற்றையும் எடுத்து வைத்துக்கொள்க

- பபா நாங்கள் இன்று வீட்டில் மரம் ஒன்று செய்வோம்
- பிள்ளைக்கு வீட்டு மரம் செய்ய விருப்பந்தானே
- எங்கள் வீட்டில் பபாவுடன் வேறு யார்யார் இருக்கிறார்கள்?
- அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அக்கா, அண்ணா........
- எல்லோரையும் கூட்டிக்கொண்டு வாங்கோ. எல்லோரும் சேர்ந்த வீட்டு மரம் செய்வோம்
- அக்கா, அண்ணாவைக்கூப்பிட்டு அந்த வாளி, மரக்கிளை எல்லாம் எடுத்து வாங்கோ
- வாளியினுள்ளே நான் மரக்கிளையை வைக்கிறேன்
- பபா கவனமாக இந்தக்கோப்பையால் மணலை அள்ளி வாளியின் உள்ளே போடுங்கோ
- மரக்கிளையை ஆடாமல் நிற்க செய்யுங்கோ
- இப்ப இது இலைகள் இல்லாத மரம்
- இந்த மரத்திற்கு இலைகள் தேவை
- நாங்கள் எங்களுடைய கை இலைகளைச் செய்து மரத்திற்கு இலை வைப்போம்
- இந்த தடித்ததாளிலே நாங்கள் எங்கள் கையைக்கீற வேண்டும்
- எல்லோரும் அம்மா கீறுவதைப்போல் கவனமாகக்கீற வேண்டும்
- தாத்தா கீற அண்ணா உதவிசெய்யுங்கோ
- பாட்டிக்கு அக்கா உதவிசெய்யுங்கோ
- பபா தானாகக் கீறுவா. தேவையென்றால் அம்மா உதவிசெய்கிறேன்
- அப்பாவும் கீறுங்கோ. அண்ணா, அக்கா கீறுங்கோ
- கவனமாகக்கத்தரிக்கோலால் வெட்டுங்கோ
- பச்சை நிறம்
- வடிவாக நிறந்தீட்ட வேண்டும்
- அக்கா தனித்தனி சின்னத்துண்டு தாளில் பெயர்களை எழுதுங்கோ
- அவர்களது இலையில் ஒட்டுங்கோ
- அம்மாவின் கையோ, பபாவின் கையோ பெரியது? இரண்டையும் வைத்துப்பாருங்கோ
- அம்மாவின் கை
- அப்பாவின் கையோ பபாவின் கையோ சிறியது?

- பபாவினது கை
- கையின் அடிப்பக்கத்தில் நூல் கட்டி மரக்கிளையில் தொங்கவிடுவோம்
- இப்ப மரக்கிளைக்கு இலைகள் வைத்து விட்டோம். என்ன இலை?
- கை இலை
- மரம் நல்ல வடிவாக இருக்கிறது என்ன?
- இது எங்கள் வீட்டு மரம்
- இதில் எது பபாவின் கை?
- எது அப்பாவின் கை?
- எது அம்மாவின் கை?
- எது பாட்டியின் கை?
- எது அக்காவின் கை?
- எது அண்ணாவின் கை?
- எது தாத்தாவின் கை?
- வெய்யில் பட்டால் வெளிறிப்போய்விடும்
- யாரது இலை மிகவும் சிறியது?
- இந்த அழகான மரத்தை எங்கே வைப்போம்?
- வெய்யில் பட்டால் வெளிறிப்போய்விடும்
- மழைத்தண்ணீர் பட்டால் நனைந்து பழுதாகிவிடும்
- காற்றில் வைத்தால் கிழிந்துவிடும்
- வெயில், மழை, காற்று படாமல் எங்கே வைப்போம்?
- வீட்டினுள்ளே முன்வாசலுக்குக்கிட்ட அழகாக வைப்போம்

**செயற்பாட்டிலிருந்து.....**

| | |
|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – தசைநார் விருத்தி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை, காப்புணர்வு |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – பெரிது, சிறிது, ஒன்று, பச்சை, கனவளவு, வெள்ளை |
| ❖ மொழி விருத்தி | – கிரகித்து துலங்கல் கலந்துரையாடல், எழுத்துமுன் பயிற்சி |
| ❖ சூழல்சார் விருத்தி | – உறவு, மரம், மழை, வெயில், காற்று |
| ❖ அழகியல் விருத்தி | – இரசனை |



# செயற்பாடு- 13 : ரொட்டி சுடுவோம்



## செயல் விளக்கம் :

- பபாவுக்கு ரொட்டி விருப்பமா?
- நாங்கள் இன்றைக்கு ரொட்டி சுடுவோமா?
- கைகளை சுத்தமாக சோப்போட்டு கழுவுவோம்.
- கைவிரல் இடவெளிகளையும் உரஞ்சி வடிவாக கழுவுங்கோ.
- அம்மா மாவை பதமாகக் குழைக்கிறேன்.
- இனி நன்றாகப் பிசைந்து பதமாக்க வேண்டும்.
- பபாவுக்கும் கொஞ்ச மாவைத்தருகின்றேன்
- அம்மாவிடம் கூட மா
- அம்மாவைப் போன்று நன்றாகப் பிசைந்து குழைக்க வேண்டும்.
- இரண்டு கைகளாலும் பிசையுங்கோ
- இரண்டு கைகளுக்கும் நல்ல தசைநார்ப்பயிற்சி கிடைக்கும் வண்ணம் பிசைந்து குழைக்க அவகாசம் கொடுக்கவும்.
- இப்ப மாவை இரண்டு கைகளாலும் தட்டையாகத் தட்டுங்கோ.
- தட்டு நிறைய வரக்கூடியதாக மெல்லியதாகத் தட்டுங்கோ.
- இன்னும் தட்டுங்கோ....
- நல்ல வட்டமாக வந்திருக்கிறது.
- இந்த சின்னக்கைகள் எவ்வளவு வேலை செய்திருக்கிறது.
- என்னுடைய பிள்ளை நல்ல கெட்டிக்காரி.
- கைகளைக் கழுவுங்கோ.
- பபா பாட்டிக்கு ரொட்டி சுட்ட கதையை சொல்லுங்கோ.

### செயற்பாட்டிலிருந்து......

- ❖ உடலபிவிருத்தி — தசைநார்ப் பயிற்சி, சுகாதாரம்
- ❖ மனவெழுச்சி விருத்தி — மகிழ்ச்சி, நம்பிக்கை, திருப்தி, காப்புணர்வு
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி — கூட, இரண்டு, கொஞ்சம், வட்டம், தட்டை
- ❖ மொழி விருத்தி — கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், எழுத்து முன்பயிற்சி
- ❖ சூழல்சார் விருத்தி — உணவு



# செயற்பாடு- 14 : இரவு உணவு உண்போம்

## செயல் விளக்கம் :

- பபா சாப்பிடுவோமா?
- வாங்கோ எல்லோருக்கும் சாப்பாடு எடுத்து மேசையில் வைப்போம்
- சின்னக் கைகளாலே அம்மாவிற்கு உதவி செய்யுங்கோ
- மேசையை இந்தத்துணியால் துடையுங்கோ
- ரொட்டி, சம்பல், ஜாம், மாஜரின், மாமைற் எல்லாம் எடுத்து வைப்போம்
- பபாவிற்கு ரொட்டிக்கு என்ன விருப்பம்?
- தேன்
- சரி. அப்பா, அண்ணா, அக்கா எல்லாரையும் கூப்பிடுங்கோ
- பபா எல்லாருக்கும் கதிரை போதுமா என்று பாருங்கோ
- பபா கதிரைகளைத்தொட்டு அப்பா, அம்மா, பபா, அண்ணா, அக்கா….. போதும்
- கதிரை போதும் என்ன?
- எல்லாரும் சாப்பிடுங்கோ
- அப்பா :- ரொட்டி ருசியாக இருக்கிறது. பபாவா ரொட்டி தட்டினவா?
- பிள்ளையும் ரொட்டி தட்டினவா. பிள்ளை கெட்டிக்காரி
- அம்மாவிற்கு பிள்ளை எவ்வளவு உதவி? எல்லாரும் என்னத்துடன் சாப்பிடுகிறார்கள் எனப் பாருங்கோ
- அம்மா : பபா - தேன்
  அப்பா - சம்பல்
  அக்கா - ஜாம்
  அண்ணா - மாஜரின்
  அம்மா - மாமைற்
- நல்லது எல்லோரும் சாப்பிடுங்கோ
- அக்கா : சாப்பிட்டுமுடிய எல்லாரும் ஒரு பாட்டு பாடுவோம்
- ‘ சின்ன சின்ன ரொட்டி
  வட்டமான ரொட்டி
  பபா சுட்ட ரொட்டி
  ருசியான ரொட்டி

**செயற்பாட்டிலிருந்து.....**

- ❖ உடலபிவிருத்தி – நடத்தல், துடைத்தல், பொருட்கள் எடுத்து வைத்தல்
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை, தன்னார்வம்
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – ஒன்று ஒன்றிற்கான தொடர்பு, வட்டம், பரப்பளவு
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எண்ணத்தைவெளியிடல்
- ❖ அழகியல் விருத்தி – இரசனை, ஆக்கத்திறன், பாடல்
- ❖ சூழல்சார் விருத்தி – இரவு உணவு
- ❖ சமூக விருத்தி – மற்றவர்களிற்கு உதவுதல்



# செயற்பாடு- 15 : கோயிலுக்கு போவோம்

## செயல் விளக்கம் :

- பபா இன்றைக்கு வெள்ளிக்கிழமை.
- பிள்ளையார் கோயிலுக்கு போவோம்
- அக்காவை கூப்பிட்டு குளியுங்கோ
- பூக்கூடை நிறைய பூ பிடுங்குங்கோ.
- அச்சா சட்டை போட்டு, தலை சீவி, பொட்டு வைத்து வெளிக்கிடுங்கோ.
- அம்மாவும் குளித்து வெளிக்கிடுகிறேன்.
- பபா அர்ச்சனை தட்டை எடுங்கோ.
  வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், கற்பூரம், சாம்பிராணி தட்டத்திலை வைப்பம்.
- பூத்தட்டத்தையும் எடுங்கோ.
- அப்பாவிடம் சொல்லிப் போட்டு வாங்கோ
- அப்பா : யாரோடு கோயிலுக்கு போறிங்க?
- பபா : அம்மாவோடு....
- அப்பா : எப்படிப் போறிங்க?
- பபா : நடந்து....
- அப்பா: கவனமாய் போய் கும்பிட்டு வாங்கோ.
- கோயில் மணி அடிக்கிறது. கெதியாக போவோம் வாங்கோ.
- கால் கழுவி சுத்தமாகத்தான் கோயிலுக்கு போகவேணும்.
- வாங்கோ கால் கழுவுவோம்.
- வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காயையும் கழுவுவோம்.
- அர்ச்சனை செய்ய ரிக்கற் எடுப்போம்.
- பபா இந்தக் காசை கொடுத்து ரிக்கற் எடுங்கோ.
- வாங்கோ கும்பிடுவோம்.
- முதல் பிள்ளையாரை கும்பிடுவோம்.
- ஐயா தீபம் காட்டுகிறார்.
- கைகளை தலைக்கு மேலே வைத்து கும்பிடுங்கோ.
- இப்போ விழுந்து கும்பிடுவோம்.
- வாங்கோ சுற்றி கும்பிடுவோம்.
- சின்னக் கால்களால் நடந்து வாங்கோ.
- சரி அர்ச்சனை தட்டைத்தை ஐயாவிடம் கொடுங்கோ.
- தட்டத்திற்கு உள்ளே ரிக்கற்றை வையுங்கோ.
- ஐயாவிற்கு பிள்ளையினுடைய பெயர் சொல்ல வேண்டும். நட்சத்திரம் சொல்ல வேண்டும்.

- ஐயா : பெயர் - மதுரா
  நட்சத்திரம் - சுவாதி
- ஐயா பபாவிற்கு அர்ச்சனை செய்கிறார். தீபம் காட்டுகிறார் கும்பிடுங்கோ.
- பபா தீபத்தை தொட்டு கும்பிடுங்கோ.
- இரண்டு கைகளாலும் விபூதி வாங்குங்கோ. நெற்றியிலை பூசுங்கோ, பொட்டு வையுங்கோ.
- பூ எடுத்து காதிலை வையுங்கோ.
- என்னுடைய பிள்ளை கெட்டிக்காரி. ஐயாவிடம் தட்டத்தை வாங்குங்கோ.
- வாங்கோ வீட்டிற்கு போவோம்.
- எல்லோருக்கும் விபூதி, சந்தனம், குங்குமம் கொடுங்கோ.
- தட்டத்தை சாமித்தட்டிலை வையுங்கோ.
- கோயிலுக்கு போன கதையை பாட்டிக்கு சொல்லுங்கோ.

### செயற்பாட்டிலிருந்து.....

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – | நடத்தல், பூ பிடுங்கல், தட்டம் தூக்கிச் செல்லல் எடுத்தல், வைத்தல் |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – | மகிழ்ச்சி, தன்நம்பிக்கை, தன்னார்வம் |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – | காசு, முதல், மேலே, சின்ன, உள்ளே, இரண்டு |
| ❖ மொழி விருத்தி | – | கிரகித்து துலங்கல், சொற்களஞ்சியவிருத்தி, கதைகூறல், கலந்துரையாடல் |
| ❖ அழகியல் விருத்தி | – | இரசனை, ஆக்கத்திறன, பாடல் |
| ❖ சூழல்சார் விருத்தி | – | கோயில்,நமக்கு உதவுபவர் ஐயர் |
| ❖ சமூக மனவெழுச்சி | – | மகிழ்ச்சி, தன்நம்பிக்கை, பெருந்தன்மை, விருப்புடன் செயற்படல், உதவி செய்ய விரும்புதல். |




## செயல் விளக்கம் :

- அப்பா சந்தையிலிருந்து வந்துவிட்டார்.
- மரக்கறிகள், பழம் எல்லாம் வாங்கி வந்தருக்கிறார்
- எல்லாம் ஒரே குவியலாக உள்ளது.
- தனிய தனிய எடுத்து வைப்பம்.
- பபா ஓடி வாங்கோ.
- இந்த பச்சை கூடையிலை கத்தரிக்காய்களை வையுங்கோ .
- இந்த சிவப்பு கூடையிலை தக்காளிப்பழங்களை வையுங்கோ .
- இந்த மஞ்சள் கூடையிலை கரட்டை எடுத்து வையுங்கோ .
- இந்த நீலக் கூடையிலை வெங்காயத்தை போடுங்கோ.
- பப்பாப்பழத்தை எடுத்து மேசைக்கு மேலை வையுங்கோ .
- பபா கெட்டிக்காரி. அம்மாவுக்கு பபா தான் உதவி.
- பபாவுக்கு என்ன பழம் விருப்பம்?
- மாம்பழம்.....
- அப்போ பப்பாப்பழம் விருப்பமில்லையோ?
- விருப்பம்.....
- பப்பாப்பழம் உடம்புக்கு நல்லது.
- பபாவுக்கு என்ன மரக்கறி விருப்பம்?
- தக்காளிப்பழம், கரட் ............
- இன்றைக்கு பபாவுக்கு கத்தரிக்காய் பொரித்து தாறன் சாப்பிட்டு பாருங்கோ.

**செயற்பாட்டிலிருந்து.....**

- உடலபிவிருத்தி – குனிதல், நிமிர்தல், எடுத்தல், வைத்தல்
- கணித எண்ணக்கருவிருத்தி – குவியல், தனிய, சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம்
- மொழி விருத்தி – கிரகித்து இரசித்தல், துலங்கல், சொற்களஞ்சியவிருத்தி, கலந்துரையாடல், எண்ணங்களை வெளிப்படுத்தல்.
- அழகியல் விருத்தி – இரசனை, நிறங்கள், வடிவங்கள்
- சூழல்சார் விருத்தி – மரக்கறிகள், பழங்கள்




## செயல் விளக்கம் :

- ஒரு தடித்த வெள்ளைக்கடதாசியில் ஒரு பெரிய கொய்யாப்பழம், ஒரு சிறிய கொய்யாப்பழம் வரைந்து கொள்க

- பபா இந்த பச்சை ரிசு பேப்பரை கிழியுங்கோ
- சின்ன துண்டுகளாக கிழியுங்கோ
- இந்தப்பெட்டியில் துண்டுகளை போடுங்கோ
- இந்த மஞ்கள் ரிசுப்பேப்பரை கிழியுங்கோ
- மற்றப்பெட்டியில் போடுங்கோ
- இப்ப எந்த கொய்யாப்பழத்தை முதல் ஒட்டுவோம்?
- பெரிய பழம்
- நான் பெரிய பழத்திற்கு பசை பூசுகிறேன்
- நீங்கள் வடிவாக ஒட்டுங்கோ
- பபாவின் மரத்திலுள்ள கொய்யாப்பழம் மாதிரி இருக்கவேணும்
- இரண்டு நிறத்தையும் கலந்து ஒட்டலாம். Very Good
- சின்னப்பழத்தையும் ஒட்டுங்கோ
- அப்பாடா வடிவாக இருக்கிறது. சின்னன் நல்ல பழம் போல் இருக்கிறது
- மஞ்கள் நிறம்கூடத்தெரியுது
- பபா நல்ல கெட்டிக்காரி
- பபா இந்தப்படத்தை முதலில் பாட்டிக்கு காட்டுங்கோ
- படத்தைப்பற்றி பாட்டிக்கு சொல்லுங்கோ

(இது கொய்யாப்பழங்கள் இவை பபா ஒட்டியவை சின்னப்பழம் பழுத்து விட்டது. மஞ்சள் நிறம். அக்கா உதவி செய்தவா)

- பபாவின் அறையில் வைப்போம்
- அம்மா, அப்பா வரட்டும் 2 கொய்யாப்பழங்களையும் காட்டுவோம்

### செயற்பாட்டிலிருந்து

| | |
|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – கிழித்தல், ஒட்டுதல், தசைநார் விருத்தி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – மகிழ்ச்சி,நம்பிக்கை, துணிவு |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – பெரிது, சிறிது, பச்சை, மஞ்சள், பரப்பளவு |
| ❖ மொழி விருத்தி | – கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், சொற்களஞ்சியவிருத்தி |
| ❖ சூழல்சார் விருத்தி | – கொய்யாப்பழம் |
| ❖ அழகியல் விருத்தி | – இரசனை, ஆக்கத்திறன் |



# செயற்பாடு- 18 : தேர் கட்டுவோம்

## செயல் விளக்கம் :

➢ பபா இன்றைக்கு நாங்கள் தேர் கட்டுவோமா?
➢ அம்மாவோடு வாங்கோ தென்னங் குரும்பைகள் எடுப்போம்.
➢ பச்சை குரும்பைகள் தான் தேர் செய்வதற்கு நல்லது.
➢ பபா இந்தாங்கோ ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு குரும்பைகள்
➢ இனி தென்னம் ஈர்க்கு தேவை
➢ தென்னம் ஈர்க்கு குத்திப்போடும். கவனமாக எடுக்க வேணும். அம்மா எடுக்கிறேன்.
➢ பிள்ளையினுடைய அறைக்கு போவோம்.
➢ இருங்கோ இரண்டு பேரும் சேர்ந்து தேர் செய்வோம்
➢ குரும்பையிலை மூழைக் கழட்டுவோம்.
➢ கவனமாக ஒரு குரும்பையிலை ஈர்க்கை குத்துவோம்.
➢ இப்ப இரண்டு குரும்பையிலையும் இரண்டாவது ஈர்க்கை குற்றி இன்னொரு குரும்பையில் குத்துவோம்
➢ மூன்று குரும்பை எடுத்துவிட்டோம்.
➢ இந்த மூன்று குரும்பையிலையும் தனித்தனி ஒவ்வொன்றாக மூன்று ஈர்க்குகளை குற்றுவோம்.
➢ மூன்று ஈர்க்கையும் நாலாவது குரும்பையிலை குத்துவோம்.
➢ இப்ப தேர் கட்டிவிட்டோம்
➢ வடிவாக இருக்க வேணும் தானே நிற ரிசுப்பேப்பர் ஒட்டுவோம்.
➢ என்ன நிறம் ஒட்டுவோம் ?
➢ சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை......
➢ நான் அளவாக மடிச்சுத்தருகிறேன்
➢ நீங்கள் கத்திரிக்கோலால் கவனமாக வெட்டித் தாங்கோ
➢ அம்மா ஒட்டுகிறேன். சரியோ என்று பார்த்து சொல்லுங்கோ.
➢ உச்சியிலை ஒரு கொடியும் பறக்க விடுவோம்
➢ நல்ல வடிவான தேர். கட்டியிழுக்க கயிற்றை எடுத்துவாங்கோ.
➢ (Right) றைற் கயிறு கட்டி முடிந்தது.
➢ பபா தேரை இழுங்கோ அம்மாவும் இழுக்கிறேன். அரோகரா.... அரோகரா.....

### செயற்பாட்டிலிருந்து

| | |
|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – நடத்தல், வெட்டுதல், இழுத்தல் |
| ❖ அழகியல் விருத்தி | – இரசனை, ஆக்கத்திறன் |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – மகிழ்ச்சி , தன்னம்பிக்கை |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு |
| ❖ சூழல் சார் விருத்தி | – தென்னங் குரும்பை,, ஈர்க்கு, தேர் |
| ❖ மொழி விருத்தி | – கிரகித்து துலங்கல், எண்ணங்களை வெளிப்படுத்தல், சொற்களஞ்சியவிருத்தி |



# செயற்பாடு- 19 : வாகனங்களை அவதானிப்போம்

## செயல் விளக்கம் :

- பபா எங்கள் வீட்டில் என்ன வாகனங்கள் இருக்கிறது?
- சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார்....
- நாங்கள் றோட்டிற்கு போய் வாகனங்கள் பார்ப்போம்
- பின்னேரம் போவோம். வெய்யில் இருக்காது
- இப்ப உங்களிடம் உள்ள விளையாட்டு வாகனங்களை எடுத்து விளையாடுங்கோ
- பாட்டியும் நீங்களும் விளையாடுங்கோ
- பின்னேரம் றோட்டுக்கரையிலை உள்ள அம்மன் கோயிலடிக்கு போவோம்
- அங்கே நல்ல வேப்பமரம், ஆலமரம், நிற்கிறது. நல்ல நிழல். அந்த நிழலில் நின்று பாப்போம்
- 4 மணிக்கு போவோம். அக்காவையும் கூட்டிக்கொண்டு போவோம்
- நடக்கிறது உடம்பிற்கு நல்லது. கிட்டத்தானே நடந்து போவோம்
- கமராவையும் எடுத்துக்கொண்டு வாங்கோ. வாகனங்களை படம் எடுப்போம்
- சரி 3மணியாகுது. வெளிக்கிடுங்கோ. 4 மணிக்கு போகவேணும்.
- ஆறுதலாக நடந்து வாங்கோ. பபாவினுடைய சின்னக் காலால்
- அம்மனை கும்பிடடுவிட்டு மரநிழலில் நிப்போம்
- இதோ என்ன வருகுதென்று பாருங்கோ. மோட்டார்சைக்கிள். இரண்டு அண்ணாமார் வருகிறார்கள்
- இரண்டு பேரும் கெல்மற் போட்டிருக்கினமோ பாருங்கோ. கெல்மற் கட்டாயம் போடவேணும்.
- கெல்மற் போட்டால் பாதுகாப்பு. விழுந்தாலும் தலை அடிபடாது. சரியான வேகமாக வருகிறார்கள்
- மோட்டர் சைக்கிளிற்கு எத்தனை சில்லு சொல்லுங்கோ பாப்போம்?
- இரண்டு
- அதோ பொலிஸ்மாமா மோடடார் சைக்கிளை மறித்துவிட்டார். லைசன்ஸ் பாக்கிறார். லைசன்ஸ் எடுக்காமல் வாகனம் ஓடக்கூடாது. அதற்காகத்தான் பொலிஸ்மாமா மறித்திருக்கிறார்.
- இதோ பெரிய வாகனம் வருகிறது. இதற்கு என்னபெயர்?
- பஸ்
- பஸ் இல் கனபேர் இருக்கலாம்.
- அன்று பூங்காவிற்கு பஸ்ஸில் தானே போனனாங்கள்.
- இது என்ன வாகனம்?

- வான்
- இதுவும் பஸ்மாதிரி ஆட்களை ஏற்றி, இறக்கி உதவி செய்கிறது
- இதோ ஒரு கார் வருகிறது. இதன் நிறம் என்ன?
- கறுப்பு
- வசதியானவர்கள் தங்களிற்கென்றே சொந்தமாக கார் வைத்திருப்பார்கள்
- ஆட்டோ ஒன்று ஆறுதலாக வருகுது. பச்சை நிற ஆட்டோ. இதற்கு மூன்று சில்லு. பாருங்கோ
- எங்கள் வீட்டிற்கு பக்கத்து மாமா ஆட்டோ வைத்திருக்கிறார். அவர் வாடகைக்கு ஆட்டோ ஓடுறவர்
- பாட்டியை ஆஸ்பத்திரிக்கு ஆட்டோவிலைதானே கூட்டிப்போனனாங்கள்.
- பபா தானே ஆட்டோ மாமாவிற்கு காசு கொடுத்தனீங்கள்.
- அதோ! வயதுபோன ஐயா கஸ்ரப்பட்டு சைக்கிள் ஓடி வாறார். நல்லா களைத்து விட்டார்.
- பபா எத்தனை சில்லு சைக்கிள்?
- நேரம் போகுது. இருள்வதற்கு முன் நாங்கள் வீட்டிற்கு போவோம்.
- ஞாயிற்றுக்கிழமை புகையிரத நிலையத்திற்கு போவோம். புகையிரதம் பார்ப்போம்.
- பபா வீட்டிற்கு போய் என்ன பார்த்தனிங்கள் என்று பாட்டிக்கு சொல்லுங்கோ.

செயற்பாட்டிலிருந்து......

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – | நடத்தல், தசைநார்விருத்தி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – | மகிழ்வு, மனநிறைவு |
| ❖ சூழல் சார் விருத்தி | – | வாகனங்கள், கோயில், பொலிஸ் |
| ❖ கணித விருத்தி | – | நேரம், பின்நேரம், ஞாயிற்றுக்கிழமை, 3மணி, 4மணி, சின்ன, இரண்டு, மூன்று, வேகமாக, கூட, பெரிய, சிறிய கனபேர், வெள்ளை, கறுப்பு, பச்சை, வாடகை, வயதுபோன |
| ❖ மொழி விருத்தி | – | கிரகித்து துலங்குதல்,எண்ணங்களை வெளிப்படுத்தல், கலந்துரையாடல், நடந்தவற்றைக் கூறுதல், சொற்களஞ்சிய விருத்தி |
| ❖ சமூக விருத்தி | – | சமூக உறவு |
| ❖ அழகியல் விருத்தி | – | இரசனை |



# செயற்பாடு- 20 :
# கறி சமைப்போம்



## செயல் விளக்கம் :

- பபா என்ன கறி சமைப்போம்?
- கத்தரிக்காய் பால்க்கறி
- கரட் சம்பல்
- பொன்னாங்காணி வறை
- மீன் குழம்பு
- பபா :- மீன் இல்லை
- அம்மா :- மீன் விக்கிற மாமா சைக்கிளில் இப்ப மீன் கொண்டு வந்து மணியடிப்பார்
- பபாவும் நானும் போய் வாங்குவோம்
- பாய்க்கும் காசும் எடுத்து மேசையில் வைப்போம்
- இப்ப தோட்டத்தில் பொன்னாங்காணி பிடுங்குவோம். பபா பேசினைப்பிடியுங்கோ
- அம்மா பொன்னாங்காணியை உள்ளே போடுகிறேன்
- பொன்னாங்காணி போதும்
- மணியடிக்குது மீன்காரன்
- பபா பொன்னாங்காணியை கொண்டுபோய் வையுங்கோ
- பாய்க்கையும் காசையும் எடுத்து வாங்கோ
- பபா பாருங்கோ
- இது பெரிய மீன்
- இது சிறிய மீன்
- பெரிய மீன் வாழைமீன்
- முள் இருக்குது. பபாவிற்கு வேண்டாம்
- நல்ல மீனாகத்தாங்கோ
- இது முள்ளில்லாத நல்லமீன்
- எவ்வளவு காசு?
- நூறு ரூபா
- பபா நூறு ரூபா காசையும் கொடுங்கோ
- மீன்மாமா நல்ல மாமா
- பபாவிற்கு வீட்டில் கொண்டுவந்து மீன் தந்தவர்
- நாங்கள் சமைத்துச்சாப்பிடுவோம் வாங்கோ

### செயற்பாட்டிலிருந்து

- உடலபிவிருத்தி – நடத்தல், எடுத்தல், வைத்தல், பேசின் பிடித்தல்
- கணித எண்ணக்கருவிருத்தி – பெரிய, சிறிய, காசு, நூறு ரூபா
- மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எண்ணத்தைவெளியிடல் கலந்துரையாடல்
- சூழல்சார் விருத்தி – மீன், பொன்னாங்காணி, மரக்கறி
- சமூகமனவெழுச்சி விருத்தி – தனது பெறுமானம், நம்பிக்கை, மகிழ்ச்சி




# செயற்பாடு- 21 : குமிழ்கள் செய்வோம்

## செயல் விளக்கம் :

- நாங்கள் நல்ல விளையாட்டு ஒன்று விளையாடுவோம்.
- பபா நீரில் சவர்க்காரம் கரையுமா?
- இந்த நீரிலை சவர்க்காரத்தை கரைத்து பாருங்கோ.
- கரைந்து விட்டது.
- சிறுகுழாய்கள், பப்பாசித் தண்டுகள் இருக்கிறது.
- சவர்க்காரக் கரைசலில் குழாயை தொட்டு ஊதினால் என்ன நடக்கும். (சிறிது நேரம் சிந்திக்க விடவும்.)
- சவர்க்கார நீரை வாயால் உறிஞ்சி எடுக்கக் கூடாது.
- நாங்கள் சவர்க்காரநீரில் குழாயை தோய்த்து காற்றிலை ஊதுவோம்.
- அப்பாடா எவ்வளவு குமிழ்கள்?
- வடிவாக இருக்கிறது.
- மேலே மேலே போகிறது.
- பப்பாசித் தண்டாலையும் ஊதுங்கோ.
- பெரிய குமிழ்கள்......
- குமிழ்களிற்குள்ளே என்ன இருக்கிறது?
- நாங்கள் ஊதிய காற்று இருக்கிறது.
- அண்ணா அக்காவையும் கூப்பிடுங்கோ. ஒரே நேரத்திலை எல்லாரும் ஊதுவோம்
- நிறைய குமிழ்கள் மேலே போகும்.
- பார்க்க குதூகலமாக இருக்கும்.
- பாட்டு: சவுக்கார கரைசலிலே
  குமிழ்கள் ஊதுவோம்
  சின்னகுமிழ் பெரியகுமிழ்
  குமிழ்கள் ஊதுவோம்

**செயற்பாட்டிலிருந்து.......**

- ❖ உடலபிவிருத்தி – தசைநார் பயிற்சி
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, சுயநம்பிக்கை, உற்சாகம்
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – பெரிய, சிறிய, நிறைய, மேலே, ஒரேநேரம்
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், கலந்துரையாடல், சொற்களஞ்சியவிருத்தி
- ❖ விஞ்ஞானஅறிவு விருத்தி – சவர்க்காரம் கரைதல், குமிழ்கள் மேலே போதல், குமிழினுள் காற்று
- ❖ அழகியல் விருத்தி – இரசனை, ஆக்கத்திறன், பாடல்



# செயற்பாடு- 22 : மணலில் விளையாடுவோம்

## செயல் விளக்கம் :

- மணலில் விளையாடுவது பிள்ளைகளிற்கு மிகவும் மகிழ்ச்சியான செயற்பாடாகும். அத்துடன் அதிகளவான அறிவாற்றல் விருத்திக்கும் அடித்தளமிடகின்ற செயற்பாடுகளை மணல்விளையாட்டின்மூலம் அனுபவிக்க முடியும்
- சுத்தமான அரித்த வெள்ளை மணலை சுத்தமான இடத்திலே பிள்ளை சுயமாக விளையாடக்கூடியவாறு வைக்கவும்
- பிள்ளை சுயமாக விளையாடி மகிழ்வதற்கு சந்தர்ப்பம் வழங்குக
- ஆரம்பத்தில் பிள்ளை மணலைக்கண்டதும் அதனை இரு கைகளாலும் குவித்து குவியலாக்கி மகிழ்வதைக்காண முடியும்

- பபா இன்னுமோர் மணல் குவியல் செய்வோம்
- எது பெரிய மணல் குவியல்
- பெரிய குவியலில் ஒரு பக்கத்தில் தோண்டி ஒரு பொந்து வையுங்கோ பாப்போம்
- தோண்ட ஏலாது
- இப்ப இந்த மணலை பரவி அதில் படம் கீறுவோமா?
- பபா நீங்கள் கீறுங்கோ. என்ன படம்?
- பூனைக்குட்டி
- கெட்டிக்காரி
- இனி சிரட்டை நிறைய மணல் அள்ளி பெரிய பாத்திரத்தில் போடுங்கோ
- பெரிய பாத்திரம் நிறையும்வரை போடுங்கோ
- சரி. இப்ப கடதாசிப்பூக்களை இந்த மணலில் குத்தி வடிவான பூச்சாடி செய்யுங்கோ பாப்போம்
- Very Good
- பபா நாளைக்கு மணலில் நல்ல புது விளையாட்டு விளையாடுவோம் என்ன?
- அக்காவோடு போய் கை, காலை சோப் போட்டு கழுவுங்கோ. சட்டையை மாற்றி சாமி கும்பிடுங்கோ

**செயற்பாட்டிலிருந்து.......**

- உடலபிவிருத்தி – தசைநார் விருத்தி
- மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை
- கணித எண்ணக்கருவிருத்தி – பெரிய, ஒரு, நாளை, நிறை, பரப்பளவு, கனவளவு
- மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எண்ணங்களை வெளிப்படுத்தல், எழுத்துப்பயிற்சி
- சூழல்சார் விருத்தி – மணல்
- அழகியல் விருத்தி – இரசனை, ஆக்கத்திறன்



# செயற்பாடு- 23 : ஈரமணலில் விளையாடுவோம்

## செயல் விளக்கம் :

- மணலில் சிறிதளவு நீர் தெளித்து ஈரமாக்கி விடவும்.
- பபா மணலில் விளையாடுவோம். வாங்கோ.
- இந்த மண்ணைத் தொட்டு பாருங்கோ.
- எப்படி இருக்கிறது?
- ஈரமாக இருக்கிறது.
- எப்படி ஈரமானது? அம்மாமணலிற்கு நீர் தெளித்தனான்.
- இப்ப நீங்கள் மண்குவியல் செய்யுங்கோ பார்ப்போம்.
- இரண்டு கைகளாலையும் அமத்தி வடிவாக செய்யுங்கோ.
- மண்குவியலுக்கு மேலே பபா ஏறி நின்றால் என்ன நடக்கும்?
- மண்குவியல் உடைந்துபோகும்.
- ஏன்?
- பபா பாரம்.
- மேலே இந்த மாபிளை வையுங்கோ.
- இப்ப ஏன் மண்குவியல் உடையவில்லை?
- மாபிள் பாரமில்லை.
- மண்குவியலில் ஒருபக்கத்தில் கவனமாக பொந்து தோண்டுவோமா?
- மெதுவாக தோண்டுங்கோ.
- ஈரமண் என்றதாலை பொந்து தோண்டலாம் என்ன?
- நல்ல வடிவான பொந்து.
- இப்ப பபாவும் அம்மாவும் பொந்துக்குள்ளே போவோமா?
- போக ஏலாது.
- ஏன்?
- சின்ன பொந்து.
- இந்த சின்ன பொம்மையை உள்ளே வைக்கலாமா?
- வையுங்கோ.
- வெளியிலை பாத்திகட்டி பூமரம் நடுங்கோ.
- பொம்மைக்கு அச்சா பொந்து வீடு.
  பபா நல்ல கெட்டிக்காரி.
- பபா விளையாடிமுடிய அக்காவோடு போய் கால், கை, எல்லாம் கழுவி உடுப்பை மாற்றுங்கோ.

**செயற்பாட்டிலிருந்து.......**

| | |
|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – தசைநார் பயிற்சி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – மேலே, பாரம், குறைவு,உள்ளே, வெளியே,சின்ன |
| ❖ மொழி விருத்தி | – கிரகித்து துலங்கல், எண்ணங்களை வெளிப்படுத்தல், சொற்களஞ்சியவிருத்தி, எழுத்துப்பயிற்சி |
| ❖ சூழல்சார் விருத்தி | – மணல், நீர் |
| ❖ அழகியல் விருத்தி | – இரசனை, ஆக்கத்திறன் |




## செயல் விளக்கம் :

- கடும் நிறத்திலான நான்கு நிறத்தில் தாள்களை எடுத்துக்கொள்ளவும். (கறுப்பு, நீலம், சிவப்பு, பச்சை)

- பபா (இந்த கறுப்பு தாளில்) பசையைத் தொட்டு அச்சா படம் ஒன்று கீறுங்கோ. பெரிய படம் கீறுங்கோ.
- தாளில் இந்த மணலைத் தூவுங்கோ.
- தாளை ஒரு மூலையிலே பிடித்து தூக்குங்கோ.
- இப்ப காயவிடுங்கோ.
- இதேபோல நீலநிறத்தாளை எடுத்து விரும்பியபடம் கீறுங்கோ.
- மணலைத்தூவி காயவிடுங்கோ.
- அப்படியே சிவப்பு தாளிலும்....
- அப்படியே பச்சை தாளிலும்....
- நான்கு தாள்களையும் காயவிடுங்கோ.
- தடவ எப்படி இருக்கிறது.
- கரடுமுரடாக இருக்கிறது என்ன?
- தடவிப் பார்த்து என்ன படம் என்று சொல்லலாம் என்ன?
- இப்ப எல்லாப் படத்தையும் காட்சிப்படுத்துவோம் வாங்கோ.
- அப்பா வர படங்களைக் காட்டுங்கோ.

  அப்பா சந்தோசப்படுவார்.
- எப்படிச் செய்தனீங்கள்? என்று சொல்லுங்கோ.
- அப்பா கேட்டால் புதுத்தாள் எடுத்துச் செய்து காட்டுங்கோ.

### செயற்பாட்டிலிருந்து.......

| | |
|---|---|
| ❖ உடலபிவிருத்தி | – தசைநார் விருத்தி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | – பெரிய, மூலை, கறுப்பு, நீலம், சிவப்பு, பச்சை |
| ❖ மொழி விருத்தி | – கிரகித்து துலங்கல், எழுத்துமுன்பயிற்சி, பேசுதல் |
| ❖ சூழல்சார் விருத்தி | – மணல் |
| ❖ அழகியல் விருத்தி | – சித்திரம், இரசனை, ஆக்கத்திறன் |



# செயற்பாடு- 25 : மணல் பிட்டு செய்வோம்

## செயல் விளக்கம் :

- மணலில் சிறிதளவு நீர் தெளித்து ஈரமாக்கி விடவும்.
- பபா நாங்கள் இன்றைக்கு மணல் பிட்டு செய்வோம்.
- சிரட்டையிலை ஈரமண் நிறையப்போட்டு கையாலை அமத்துங்கோ
- இப்ப சிரட்டையை திருப்பி நிலத்திலை மெதுவாக அடியுங்கோ.
- வெறும் சிரட்டையை எடுங்கோ.
- இதுதான் மணல் பிட்டு. வடிவாஇருக்கு என்ன?
- சிரட்டை மாதிரி மணல் பிட்டு இருக்குது.
- இப்ப இந்த சின்ன சிரட்டையை எடுத்து சின்ன மணல் பிட்டு செய்யுங்கோ.
- கெட்டிக்காரி
- இந்த யோக்கட் கப்பாலையும் மணல் பிட்டு செய்யுங்கோ.
- பால்ரின் பேணியாலையும் மணல் பிட்டு செய்யுங்கோ.
- பாதி இறப்பர் பந்து இருக்கு. அதாலையும் மணல் பிட்டு செய்யுங்கோ.
- இந்த புனலிற்குள்ளும் மணல் போட்டு அடியுங்கோ.
- இந்த ரம்ளராலையும் மணல் போட்டு அடியுங்கோ.
- பபா வெவ்வேறு வடிவங்களிலை மணல் பிட்டு செய்திருக்கிறா.
- காய்ந்த மண்ணிலை மணல் பிட்டு செய்யலாமா?
- இந்த காய்ந்த மணலிலை செய்து பாருங்கோ.
- செய்யமுடியாது.

**செயற்பாட்டிலிருந்து.......**

- ❖ உடலபிவிருத்தி – தசைநார் விருத்தி
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – சின்ன, பாதி, திண்ம உருக்கள், கனவளவு
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எழுத்துமுன்பயிற்சி, எண்ணங்களை வெளிப்படுத்தல், சொற்களஞ்சியவிருத்தி
- ❖ சூழல்சார் விருத்தி – மணல், நீர்
- ❖ அழகியல் விருத்தி – இரசனை, ஆக்கத்திறன்




## செயல் விளக்கம்

- விளையாட்டுத்தராசொன்றை முற்கூட்டியே தயார்செய்து கொள்ளுங்கள்
- பிள்ளைக்கு எவ்வாறு தராசைத் தொங்கவிட வேண்டும் என காட்டலாம்

- பபா இது என்ன?
- தராசு
- சந்தையில் மரக்கறிகள் தராசில் நிறுத்துத்தான் தருவார்கள்
- கடையிலும் சாமான்கள் தராசில் நிறுத்துத்தான் தருவார்கள்
- பபாவும், அம்மாவும் ஞாயிற்றுக்கிழமை சந்தைக்குப் போவோம்
- இன்று தராசில் பபா நிறுத்து விளையாடுங்கோ. இரண்டு தட்டும் நேராக இருககிறது
- யோக்கற் கப்பில் கொஞ்சமண் எடுத்து ஒரு தட்டில் வைத்தால் என்ன நடக்கும்?
- மெதுவாக ஒருதட்டில் வைத்துப்பாருங்கோ. அந்தத் தட்டு கீழே போகுது என்ன?
- அதே அளவான இன்னொரு யோக்கற் கப்பில் நிறைய மண் எடுங்கோ
- மற்றத்தட்டில் வையுங்கோ
- இப்ப என்ன நடந்தது?
- இப்ப இந்தத் தட்டு கீழே போகுது
- இரண்டு தட்டும் நேராக வர என்ன செய்ய வேண்டும்?
- குறைய மண் உள்ள யோக்கற் கப்பில் நிறைய மண் போட்டு பாருங்கோ
- இருதட்டும் நேராகும்வரை முயற்சி செய்யுங்கோ
- கீழே தாழும் யோக்கற் கப்பில் மண்கூட என்ன?
- பாரம் கூட. அதுதான் தாழுது
- தாழும் தட்டிலிருந்து கொஞ்சம், கொஞ்சமாக மணலை எடுத்தால் என்ன நடக்கும்?
- மேலே ஏறும்
- இரு தட்டும் நேராக வரும்வரை முயற்சி செய்யுங்கோ கெட்டிக்காரி. சமநிலைக்கு வந்துவிட்டது
- இப்ப இருதட்டிலும் உள்ள மண் ஒரே அளவு நிறையுடையதா?
- ஒரு யோக்கற் கப்பில் இருந்து மண்ணைக்குறைத்து தராசில் வைத்து சமநிலைப்படுத்துங்கோ
- பபா ஒரு தட்டிலுள்ள யோக்கற் கப்பிற்கு சிறிதளவு நீர் சேர்த்து ஈரமாக்குங்கள்
- ஈரமண்ணுள்ள தட்டிற்கு என்ன நடந்தது?
- கீழே போகுது
- அப்ப ஈரமண்ணுள்ள தட்டு பாரம்கூட அப்படித்தானே?
- இரு தட்டையும் சமநிலைப்படுத்தக்கூடியவாறு விளையாடுங்கோ

### செயற்பாட்டிலிருந்து............

- உடலபிவிருத்தி – தசைநார் விருத்தி
- மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்நம்பிக்கை
- கணித எண்ணக்கருவிருத்தி – கூட, கொஞ்சம், நேராக, ஒரே அளவு, நிறை, காலம், கனவளவு
- மொழி விருத்தி – கிரகித்து துலங்கல்,எண்ணங்களை வெளிப்படுத்தல், சொற்களஞ்சிய விருத்தி
- சூழல்சார் விருத்தி – மணல்




## செயல் விளக்கம்

- சுத்தமான களிமண் எடுத்து நீர் விட்டு பதமாக குழைத்து வைக்கவும். களிமண்ணிற்குப்பதிலாக கிளேயும் பயன்படுத்தலாம்
- பபா இன்று நாங்களொரு புது விளையாட்டு விளையாடுவோம்
- இதோ களிமண். களிமண்ணையெடுத்து இரு கைகளாலும் பிசைந்து உருட்டி உருண்டைகள் செய்யலாம்
- இந்தப்பலகையில் வைத்து தட்டையாக்கி விதம்விதமாய் உருவங்கள் செய்யலாம்
- மணிகள், விதைகள், இறகுகள் வைத்து செய்த உருவங்களை வடிவாக்கலாம்
- பபா நீங்கள் விரும்பிய உருவங்களைச்செய்யுங்கோ. பாட்டி பிள்ளைக்கு பக்கத்தில் இருக்கிறா
- அம்மா வீடு கூட்டிப்போட்டு வருகிறேன்
- பபா நிறைய உருவங்கள் செய்திருக்கிறா. கெட்டிக்காரி. இது என்ன உருவம்?
- ரொட்டி.
- இப்ப அம்மா பபாவோடு சேர்ந்து ஒரு பூனைக்குட்டி செய்வோமா?
- பபா நல்ல களிமண் உருண்டை ஒன்று செய்யுங்கோ. கொஞ்சம் பெரிதாக. நல்லா உருட்டுங்கோ
- இந்த மண்ணை உருட்டி சின்ன உருண்டையொன்று செய்யுங்கோ
- பெரிய உருண்டைக்கு மேலே கவனமாக சிறிய உருண்டையை வையுங்கோ
- இந்த சின்ன உருண்டைதான் பூனைக்குட்டியினுடைய முகம்
- சின்ன கறுப்பு மணிகள் இரண்டு எடுங்கோ. கண்கள் வைப்போம்.
- கொஞ்ச களிமண் எடுங்கோ மூக்கு வைப்போம்
- மீசை என்னத்தால் வைப்பம்? இந்த தேங்காய் தும்பால் வைப்போமா?
- இப்ப வால் வைக்கவேணும். கொஞ்சக்களிமண் எடுத்து வால்போல் பிடியுங்கோ
- அம்மா வால் வைத்துவிடுகிறேன். இன்னும் என்ன வைக்கவில்லை?
- காது. இரண்டு காதுகள் வைக்கவேணும். களிமண் எடுத்து பிசைந்து தாங்கோ
- அம்மா காதுகள் வைத்து விடுகிறேன். இப்பதான் நல்ல வடிவான பூனைக்குட்டி

  'மியா மியா பூனைக்குட்டி
  மீசைக்காரப் பூனைக்குட்டி
  பபா செய்த பூனைக்குட்டி
  வடிவான பூனைக்குட்டி '

- பபா பூனைக்குட்டி ஈரமாக இருக்குது. காய வைப்போம்
- அப்பா வர பூனைக்குட்டியைக் காட்டுங்கோ. எப்படிச்செய்தது என்று அப்பாவுக்கு சொல்லுங்கோ
- இப்ப வடிவாக கை, கால், உடம்பெல்லாம் சோப்போட்டுக் கழுவுங்கோ
- அச்சா சட்டை போடுங்கோ. கடவுளை கும்பிடுங்கோ. மேசையில் இருந்து படியுங்கோ

### செயற்பாட்டிலிருந்து.....

- ❖ உடலபிவிருத்தி – தசைநார் விருத்தி
- ❖ மனவெழுச்சி விருத்தி – சந்தோசம், சுயநம்பிக்கை, திருப்தி
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – தட்டை, உருண்டை, கொஞ்சம், சின்ன, கனவளவு
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல்,எண்ணத்தைவெளியிடல்,எழுத்துப் பயிற்சி
- ❖ சூழல்சார் விருத்தி – மண்
- ❖ அழகியல் விருத்தி – உருவம் செய்தல், இரசனை, பாடல்



# செயற்பாடு- 28 : சந்தைக்கு போவோம்

## செயல் விளக்கம் :

- பபா இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. நாங்கள் சந்தைக்குப்போவோம்
- நல்ல சட்டை போட்டு ஓடிவாங்கோ
- சந்தைக்கு கொண்டு போற பாய்க் எல்லாம் எடுங்கோ
- அப்பாவிடம் காசு வாங்குங்கோ
- அக்காவை தேவையானவற்றை எழுதச் சொல்லுங்கோ
- நேரம் போகுது. வெய்யில் வரப்போகுது
- கெல்மற் எடுங்கோ. முதல் சந்தையை(Market) சுற்றிப்பார்ப்போம். நல்ல மரக்கறி எங்கே இருக்குதென்று பார்த்து வாங்குவோம்
- இது நல்ல போஞ்சி. 1/4kgஎன்ன விலையென்று கேளுங்கோ
- 30 ரூபா
- பபா வாங்குங்கோ. தராசில் அந்த அம்மா. 1/4kg போஞ்சி நிறுக்கிறா பாருங்கோ
- ஒரு தட்டில் 1/4kg படி மற்றத்தட்டில் போஞ்சி. சமநிலைக்கு வரும்வரை ஒவ்வொன்றாக தராசு தட்டில் வைத்து கவனமாக நிறுக்கிறா
- சரி பாய்க்கை பிடியுங்கோ
- இந்த 30 ரூபாவையும் கொடுங்கோ
- அதில் நல்ல கத்தரிக்காய் இருக்குது வாங்கோ
- 1/2kg கத்தரிக்காய் தாங்கோ
- பபா மாமா எப்படி நிறுக்கிறார் என்று பாருங்கோ
- பபா இந்த 50 ரூபாவை கொடுங்கோ
- மாமா 10 ரூபா மீதி தருவார் வாங்குங்கோ
- வேறு என்ன பபா வாங்க வேணும்?
- கரட்
- இந்த அம்மா நல்ல கரட் வைத்திருக்கிறா
- பபா 1/4kg கரட் என்னவிலை என்று கேட்டு வாங்குங்கோ. இந்த 20 ரூபாவைக்கொடுங்கோ
- முன்பக்கத்தில நல்ல வெங்காயம் இருந்தது. 1kg 60 ரூபா என எழுதியிருக்குது. 2 kg வெங்காயம் வாங்குவோம்.

- பபா இந்த பெரிய பாய்க்கை கொடுத்து வாங்குங்கோ.
- 2 kgவும் 120 ரூபா. இந்தாங்கோ. இது 100 ரூபா, இது 20 ரூபா கொடுங்கோ
- அந்த அம்மா நல்ல இஞ்சிக்கிழங்கு வைத்திருக்கிறா.100g வாங்குங்கோ. இந்த 20ரூபாவையும் 5 ரூபாவையும் சேர்த்துக் கொடுங்கோ
- 100g இஞ்சி 25 ரூபா
- பபாவிற்கு என்ன பழம் வேணும்?
- றம்புட்டான்.
- சரி 10 றம்புட்டான் பழம் வாங்குங்கோ.
- ஒன்று 5 ரூபா பத்திற்கும் 50 ரூபா. இந்த 100 ரூபாவையும் கொடுங்கோ. மாமா 50 ரூபா மீதி தருவார் வாங்குங்கோ
- நிறைய சாமான் வாங்கிவிட்டோம். சரியான பாரம்.
- வாங்கோ போவோம்
- வீட்டிற்கு போய் பபா கொஞ்சநேரம் ஓய்வெடுங்கோ
- எல்லாச்சாமானையும் உரிய இடத்தில் வகைப்படுத்தி வைப்பது பபாவினது பொறுப்பு
- என்னுடைய சின்னப்பிள்ளை எனக்கு எவ்வளவு உதவி?
- பபா நல்ல கெட்டிக்காரி

**செயற்பாட்டிலிருந்து.....**

- உடலபிவிருத்தி – நடத்தல், வாங்குதல், தூக்கல், தசைநார்ப்பயிற்சி
- மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்னம்பிக்கை, பொறுப்பு, கௌரவம்
- கணித எண்ணக்கருவிருத்தி – காலம், இன்று, ஞாயிற்றுக்கிழமை, நேரம், பணம், kg, பாரம்
- மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எண்ணத்தைவெளியிடல், பேச்சுத்திறன்
- சூழல்சார் விருத்தி – சந்தை, எமக்கு உதவுவோர்
- சமூக் விருத்தி – வியாபாரியுடனான தொடர்பு, வெளிச்சமூக உறவு



# செயற்பாடு- 29 : சிறுவர் பூங்காவிற்கு செல்வோம்

**செயல் விளக்கம் :**

- நாங்கள் இன்று சிறுவர் பூங்காவிற்கு போகப்போகிறோம்.
- பபா வேறு யாரைக் கூட்டிக்கொண்டு போவோம்?
- அப்பா, அக்கா, அண்ணா...
- சரி எல்லாரையும் சிறுவர் பூங்காவிற்கு போகவெளிக்கிடச் சொல்லுங்கோ.
- நல்ல சட்டை போட்டு அழகாக வெளிக்கிடுங்கோ.
- பஸ்ஸில் போவோம் என்ன?
- பஸ்ஸில் பபாக்கு ரிக்கற் இல்லை. பபா சின்னப்பிள்ளை தானே.
- அப்பா மற்றவர்களுக்கு ரிக்கற் எடுப்பார்.
- சரி பூங்கா வந்து விட்டது, பெல் அடிப்போம். அப்பொழுதுதான் தான் பஸ் நிப்பாட்டுவார்கள்.
- கவனமாக பிடித்து இறங்குங்கோ. பூங்காவிற்குள் போக ரிக்கற் எடுக்கவேண்டும்.
- பபா அப்பாவோடு போய் ரிக்கற் எடுங்கோ.
- எவ்வளவு அழகான பூக்கள் பாருங்கோ பபா. பல நிறத்தில் றோசாப்பூ பாருங்கோ.
- என்னென்ன நிறம் சொல்லுங்கோ?......... சிவப்பு, மஞ்சள், வெள்ளை, றோஸ்.......
- இதிலே செம்மஞ்சள் நிறப்பூவும் இருக்கிறது.
- அந்தப்பக்கம் செவ்வரத்தம் பூவும் விதம்விதமாக இருக்கிறது.
- அடுக்கு செவ்வரத்தம் பூ நல்ல வடிவென்ன?
- விதம்விதமான குறோட்டன்கள் என்ன வடிவு?
- பபா அதிலை போய் நில்லுங்கோ படம் எடுப்போம்.
- உருவங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். பாருங்கோ.... யானை, சிங்கம், குதிரை...
- சின்னப்பிள்ளைகள் விளையாட ஊஞ்சல்,ஏணி,சறுக்கும் சாய்தளம், வாங்கோ விளையாட....
- ஊஞ்சலிலை இருங்கோ அம்மா ஆட்டுகிறேன், ஏணியிலைஏறி கவனமாக சாய்தளத்திலை சறுக்குங்கோ
- அம்மாவோடு வாங்கோ குகையினுள் போய் வருவோம். பூங்கா குளிர்மையாக இருக்கிறது. எப்படி?
- ..........மரங்கள், தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கு,.....காற்று வீசுது.
- கெட்டிக்காரி. அண்ணா, அக்காவோடு விளையாடுங்கோ. சின்னப் பிள்ளைகள் ஓடி விளையாடுகிறார்கள். அப்பாவும், அக்காவும் இந்த கதிரையிலை இருக்கிறோம்.
- சரி 6 மணியாகிறது விட்டிற்கு போவோம், பபா பூங்காவிற்கு வந்ததை பாட்டிக்கு சொல்லுங்கோ.

**செயற்பாட்டிலிருந்து.......**

- உடலவிவிருத்தி – பெருந்தசைநார் விருத்தி, மென்தசைநார் விருத்தி
- மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி, தன்நிறைவு, தன்னார்வம்
- கணித எண்ணக்கருவிருத்தி – காசு, ரிக்கற், சின்ன, நிறங்கள்
- மொழி விருத்தி – கிரகித்து துலங்கல், எழுத்துமுன்பயிற்சி, கலந்துரையாடல், சொற்களஞ்சியவிருத்தி
- சூழல்சார் விருத்தி – பூங்கா
- அழகியல் விருத்தி – இரசனை
- சமூக விருத்தி – உதவி செய்தல், சமூகத்தோடு பழகுதல்



# செயற்பாடு- 30 : தானியங்களை அறிவோம்

செயல் விளக்கம் :

- ➢ பபா இன்று ஞாயிற்றுக்கிழமை. நல்ல வெய்யில் எறிக்கிறது
- ➢ தானியங்களைப் புடைத்து காயவைத்து எடுத்து வைப்போம்
- ➢ முதல் இந்த சுளகை எடுங்கோ. அரிசியில் நெல் பொறுக்குவோம்
- ➢ நெல்லை இந்த கிண்ணத்தில் போடுங்கோ. கவனமாக நெல் பொறுக்குங்கோ
- ➢ பபா கெட்டிக்காரி. நல்ல வடிவாக நெல் பொறுக்கிவிட்டா
- ➢ இதில் கொஞ்ச நெல்லை பபாவின் கோழிக்கு போடுங்கோ. மீதியை பபா படம் ஒட்டவேண்டும்.
- ➢ அந்த சின்ன சிவப்பு வாளியினுள்ளே உழுந்திருக்கிறது. எடுங்கோ
- ➢ அம்மா சுளகில் போட்டுப்புடைத்துத்தருகிறேன். பபா நெல் பொறுக்கினமாதிரி உழுந்தில் கஞ்சல் பொறுக்குங்கோ. உழுந்தை கழுவி தட்டில் போட்டு காயவைப்போம். உழுந்து என்ன நிறம்?
- ➢ கறுப்பு
- ➢ உழுந்தில் என்ன செய்யலாம்?
- ➢ உழுத்தம்மா, கழி, தோசை, வடை……
- ➢ அந்த பச்சை வாளியில் பயறிருக்கிறது. எடுங்கோ. கஞ்சல் இருந்தால் பொறுக்குங்கோ
- ➢ வேறு தட்டு எடுங்கோ. கழுவிக்காயவைப்போம். பயறு என்ன நிறம்?
- ➢ பச்சை
- ➢ பயறில் என்ன செய்யலாம்?
- ➢ அவித்துச் சாப்பிடலாம், மோதகம், கொழுக்கட்டை, பயற்றம் பலகாரம்…..
- ➢ பருப்பு மஞ்சள் வாளியில் இருக்கிறது எடுங்கோ. இந்த பருப்பு என்ன நிறம்?
- ➢ மஞ்சள்
- ➢ இந்த நீல வாளியில் கடலைப்பருப்பு இருக்குது. எடுங்கோ. இது என்ன நிறம்?
- ➢ மஞ்சள்
- ➢ கடலைப்பருப்பில் என்ன செய்யலாம்?
- ➢ வடை, கடலைமாவில் முறுக்கு சுடலாம்
- ➢ இந்த வெள்ளை வாளியில் கடலை இருக்கு எடுத்து கஞ்சல் பொறுக்கி வையுங்கோ
- ➢ கடலை, பருப்பு கழுவிக்காயவைக்கத்தேவையில்லை. கழுவித்தானே அவிப்போம்
- ➢ பபா வெய்யிலிற்குள் நிற்கக்கூடாது. நிழலில் நின்று காகம் கலைக்கவேண்டும்
- ➢ இந்தக்கம்பி வலையால் மூடினால் காகம் எடுக்காது. பபா இந்தக்காகங்களை நான் சுகமாக கலைக்கவா?
- ➢ இந்தக்கண்ணாடியை வெயிலில் பிடித்து அசைக்க வெளிச்சம் காகத்தில்பட்டவுடன் காகங்கள் பறக்குது பாருங்கோ
- ➢ அம்மா தாங்கோ நானும் பிடிக்க.
- ➢ கவனமாகப்பிடியுங்கோ பார்ப்போம். கெட்டிக்காரிதான். சின்னக்கிண்ணங்கள் எடுத்து வாங்கோ
- ➢ பபாவுக்கு கொஞ்ச தானியம் தருகிறேன். பின்னேரம் படம் ஒட்டுங்கோ

செயற்பாட்டிலிருந்து........

- ❖ உடலபிவிருத்தி – நடத்தல், வைத்தல், எடுத்தல், தசைநார்ப்பயிற்சி
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி,தன்னம்பிக்கை,மனநிறைவு,கௌரவம், தன்னார்வம்
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – காலம், இன்று, ஞாயிற்றுக்கிழமை, பின்நேரம், சின்ன, நிறம்,
- ❖ சூழல் சார் விருத்தி – தானியங்கள்
- ❖ மொழி விருத்தி – கிரகித்து செயற்படல், பேசுதல், சொல்விருத்தி,முன்எழுத்து
- ❖ சமூக விருத்தி – வீட்டிலுள்ளோர்க்கு உதவிசெய்தல்
- ❖ அழகியல் விருத்தி – இரசனை, படம் ஒட்டுதல், ஆக்கத்திறன்
- ❖ விஞ்ஞான விருத்தி – கண்ணாடி , சூரியஒளி




## செயல் விளக்கம் :

- பபா: பக்கத்து வீட்டு பபாவிற்கு இன்று பிறந்தநாள்.
- பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு பபாவும் அம்மாவும் 5 மணிக்கு போவோம்.
- என்ன பரிசு (present) கொண்டு போவோம்?
- ராஜாவிற்கு மூன்றாவது பிறந்தநாள்.
- "வீடு ஒரு பாடசாலையாக" புத்தகம் வாங்கி கொடுப்போமா? அத்தோடு படப்புத்தகமும் வாங்கி கொடுப்போம்.
- கொஞ்ச நேரம் ஓய்வு எடுங்கோ. 4 மணிக்கு நல்ல சட்டை போட்டு வடிவாக வெளிக்கிடுங்கோ.
- அண்ணா இந்த இரண்டு புத்தகங்களையும் வடிவாக பாசல் பண்ணி பபாவிடம் கொடுங்கோ.
- 5 மணியாகிறது பபா ஓடி வாங்கோ.
- ராஜாவிற்கு பிறந்தநாள் வாழ்த்து (Happy birth day) சொல்லி வாழ்த்துங்கோ.
- நண்பர்கள் (friends) எல்லோரும் வந்துவிட்டார்கள்.
- மெழுகுதிரி கொழுத்தி கேக் வெட்டப்போகிறார்கள்.
- ராஜா எத்தனை மெழுகுதிரி கொழுத்துகிறார் என்று பாருங்கோ.
- மூன்று, இப்ப மெழுகுதிரி ஊதி நூர்க்கிறார்., கேக் வெட்டுகிறார், எல்லோரும் எழும்பி பாடுங்கோ.

Happy birth day to you
Happy birth day to you
Happy birth day dear Rajah
Happy birth day to you dear Rajah

- பபா ராஜாவினுடைய அப்பா, அம்மா என்ன செய்கிறார்கள்?
- கேக் தீத்தி படம் எடுக்கிறார்கள்.
- பபா வாங்கோ நாங்கள் பரிசைக்கொடுத்து படம் எடுப்போம்.
- பலகாரத்தை வாங்கிக் கொண்டு என்ன சொல்லவேண்டும்?
- Thank you.
- வீட்டிற்கு போய் பாட்டியிடம் என்ன பலகாரம் சாப்பிட்டதென்று சொல்லுங்கோ.
- கோப்பியை குடித்துவிட்டு கொஞ்சநேரம் மற்றப்பிள்ளைகளோடு விளையாடுங்கோ.
- பபா இனி நாங்கள் போவோம், முன்பள்ளி ரீச்சர் பழங்கள் ஒட்டிவரச்சொன்னதை மறந்துவிட்டீங்களோ?
- ராஜாவினுடைய அப்பாவிற்கும், அம்மாவிற்கும் சொல்லிட்டு வாங்கோ.
- பபா உடுப்பை மாற்றி கால், கை கழுவி சாமி கும்பிடுங்கோ.
- பாட்டியிடம் என்ன பலகாரம் சாப்பிட்டதென்று சொல்லுங்கோ.
- கேக், லட்டு, பயற்றம்பலகாரம், முறுக்கு..... கெட்டிக்காரி..
- ஓடிப்போய் மேசையிலை இருந்து பழங்களை வெட்டி ஒட்டுங்கோ.
- உதவி தேவை என்றால் அக்காவைக் கேளுங்கோ.

### செயற்பாட்டிலிருந்து........

- ❖ உடலபிவிருத்தி – நடத்தல், ஓடி விளையாடல்
- ❖ மனவெழுச்சி விருத்தி – மகிழ்ச்சி , தன்னம்பிக்கை, சுயகௌரவம்.
- ❖ கணித எண்ணக்கருவிருத்தி – இன்று,நேரம்,பிறந்தநாள்,4மணி,5மணி,மூன்று, கொஞ்சநேரம்
- ❖ சூழல் சார் விருத்தி – கொண்டாட்டம் (விழா)
- ❖ மொழி விருத்தி – கிரகித்து துலங்கல்,பேசுதல்,சொற்களஞ்சியவிருத்தி,பாடுதல்
- ❖ சமூக விருத்தி – அயலவரை மதித்தல், உறவை மேம்படுத்தல், சிறுவருடன் சேர்ந்து விளையாடல்.
- ❖ அழகியல் விருத்தி – இரசனை, பாடல்



# செயற்பாடு- 32 :
# நீரில் விளையாடுவோம்

## செயல் விளக்கம் :

- நீரில் விளையாடுவது பிள்ளைகளிற்கு மிகவும் ஆனந்தமாகும்.
- ஒரு வாளி நிறைய நீரும், ரம்ளரும், 4 பிளாஸ்ரிக்போத்தல்களும் எடுத்து வைக்கவும்.

➢ பபா நீரில் விளையாடுவோம் வாங்கோ.
➢ ரம்ளரால் தண்ணீரை நிறைய அள்ளி கவனமாக போத்தல்களிற்குள் ஒருமுறை விடுங்கோ.
➢ எந்தப்போத்தல் நிறைந்து விட்டது?
➢ ........இது நிறைந்து விட்டது........
➢ ரம்ளர் முழுத்தண்ணீரும் விட்டனீங்களா?
➢ .......ஆம்....
➢ அப்படியானால் இந்த ரம்ளரும் போத்தலும் ஒரேஅளவு தண்ணீரைக் கொள்ளுமா?
➢ .........ஆம்.........
➢ மற்றது எந்தப்போத்தல் நிரம்பியது?
➢ ......இது. நீர் மிச்சம் இருக்கிறது.
➢ போத்தல் சின்னனா? ரம்ளரை விட குறையத்தான் நீர் கொள்ளும். அப்படித்தானே?
➢ .........ஆம்........
➢ மற்ற இரண்டு போத்தலும் நிறையவில்லை., அவை பெரியவை..... இன்னும் நீர் விடுங்கோ.
➢ இப்ப இந்த போத்தல் நிறைந்துவிட்டது. இரண்டு ரம்ளர் நீர் விட இந்தப்போத்தல் நிறைந்துவிட்டது.
➢ மற்றப் போத்தலுக்கு இன்னும் நீர் விடுங்கோ.
➢ இதுவும் நிறைந்துவிட்டது. மூன்று தடவை ரம்ளரால் நீர்விட இந்தப்போத்தல் நிறைந்துவிட்டது.
➢ பாட்டி பக்கத்திலை இருக்கிறா. கொஞ்சநேரம் இந்தப்பாத்திரங்களோடு விளையாடுங்கோ.

**செயற்பாட்டிலிருந்து........**

| | | |
|---|---|---|
| ❖ உடலபிவிருத்தி | — | தசைநார் பயிற்சி |
| ❖ மனவெழுச்சி விருத்தி | — | மகிழ்ச்சி , மனநிறைவு, ஆர்வம் |
| ❖ கணித எண்ணக்கருவிருத்தி | — | நிறைய, ஒன்று, இரண்டு, மூன்று, கொள்ளளவு, மாறின்மை, குறைய, பெரிது |
| ❖ சூழல் சார் விருத்தி | — | நீர் |
| ❖ மொழி விருத்தி | — | கிரகித்து துலங்கல், சொற்களஞ்சியவிருத்தி, |
| ❖ அழகியல் விருத்தி | — | இரசனை |

மேலும் நீர் விளையாட்டுக்கள்

1) நீலம், உப்பு, சீனி, மணல், மரத்தூள் என்பவற்றை தனித்தனியாக கண்ணாடிக்குவளைகளில் நீரில் கரைத்து அனுபவம் பெற வாய்ப்பளித்தல். நீரில் மஞ்சள் கரைந்துள்ளதா? போன்ற வினாக்களை வினாவி விடைகளை கண்டறிய ஊக்குவித்தல்.

2) ஒரு பேசினில் நிறைய நீர் எடுக்க, தண்ணீர் ஊறாத சிறுபெட்டி, தட்டு, கல், நாணயக்குற்றி, ஆணி, பந்து இவற்றை நீரில் போட்டு நீரில் மிதப்பவை, அமிழ்பவை என வகைப்படுத்தவிடுக, வினாக்களை வினாவி கண்டறிய தூண்டுக.

## மேலும் பல செயற்பாடுகள்...

பிள்ளையின் முதல் ஐந்து வருடங்கள் மிக முக்கிய வளர்ச்சிக்கட்டமாகும் என்பதை பெற்றோர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த வயதிற்கு முன் ஏற்படும் கற்றல் அனுபவங்கள் வளரும் பிள்ளைக்கு மிகமுக்கிய பங்கை அளிக்கிறது. இளமையிலேயே பல்வேறு நடத்தைக் கூறுகளும், ஆளுமையும் உருவாகுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். சிறுவயதில் ஒருசிறு நிகழ்வின்போது கிடைக்கும் அனுபவம் வாழ்க்கை முழுவதும் நிலைத்திருக்கும். இதனையே நம் முன்னோர்கள் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்றும் 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்றும் அழகாக ஆழமாகக் குறிப்பிட்டுள்ளனர். குழந்தைப்பருவ முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்ட சிந்தனையாளர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர். "குழந்தை ஐந்து வயதிற்குள் கற்றுக்கொள்வதைப்பின்னர் எந்தக்காலத்திலும் கற்றுக்கொள்ளாது" எனக்காந்தியடிகளும், "குழந்தைப்பருவத்தில் ஒரு குழந்தைக்கு ஏற்படும் அனுபவந்தான் வாழ்க்கை பூராகவும் உதவப்போவது" என சிந்தனையாளர் றவேஸ் அவர்களும்" குறிப்பிட்டுள்ளனர். " குழந்தை ஐந்து வயதிற்குள்ளேயே பூரணமனிதனிற்குரிய தன்மைகளைப்பெற்று விடுவதாகவும் ஐந்து வயதை அடையும்பொழுது நன்மையாகவோ, தீமையாகவோ வளர்ச்சி பெற்றுவிடுவதாகவும், ஐந்து வயதிற்குள் இழைக்கப்படும் தீமைகள் மீள ஒருபோதும் திருத்தப்பட முடியாது" என சிந்தனையாளர் சிக்மன்புறொயிட் குறிப்பிட்டுள்ளார். எனவே பெற்றோர்களே ஐந்து வயதிற்குட்பட்ட காலம் மனிதவாழ்வில் எவ்வளவு முக்கியத்தவம் வாய்ந்தது என்பதை நீங்கள் நன்கு விளங்கியிருப்பீர்கள்.

வீடுகளிலே நாளாந்தம் எவ்வளவு சம்பவங்கள் நடைபெறுகின்றன. உங்களிற்கு உதவுவதற்காக சில சம்பவங்களை செயற்பாடுகளாக இந்நூலில் தந்துள்ளேன். அவற்றை உங்கள் குடும்பத்தவர்கள் சேர்ந்து படித்துப்பெற்ற அனுபவத்தின் ஊடாக உங்கள் வீட்டில் நிகழும் சம்பவங்களில் பொருத்தமானவற்றை செயற்பாடுகளாகமாற்றி குழந்தைக்கு அனுபவங்களாக்க முயலவேண்டுமென எதிர்பார்க்கிறேன். வலுக்கட்டாயமாக பிள்ளைகளிற்கு மூன்று தொடக்கம் நான்கு வயதில் எழுத்துக்களை எழுதுமாறு திணிப்பது முற்றாகத்தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளை சுயாதீனமாகக் கீறல், கிறுக்குதல், உருவங்களைச்சுற்றி வரைதல், சித்திரங்கள் வரைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும்போது எழுத்துக்களை தானாகவே பார்த்து எழுத முற்பட்டால் தடைசெய்யவேண்டிய அவசியமும் இல்லை.

கட்டைகளை அடுக்கி கோபுரம் அமைத்தல், வீடு கட்டுதல், உருவங்கள் அமைத்தல், கடதாசிகளைக்கிழித்தல், உருட்டுதல், கத்தரிக்கோலால் வெட்டுதல், உருவங்களில் ஒட்டுதல், நூலில் பூமணிகள் கோர்த்தல், குறித்த பகுதிக்குள் நிறந்தீட்டல், களிமண் பிசைதல், பொம்மைகள், உருவங்களைத் துண்டுதுண்டாக்கி பின் பொருத்துதல், விளையாட்டு வாத்தியங்கள் (சலங்கை, தாளம், மேளம், கிலகிலுப்பை, புல்லாங்குழல்) ஒலித்தல். உருவங்களைப்பதித்தல், உருவங்களைச் சுற்றி வரைதல், முகமூடிகள் போட்டு நடித்தல், பிராணிகளின் நடையை அபிநயம் செய்தல், வளையம் உருட்டுதல் ஆகிய செயற்பாடுகளை பிள்ளை சுயமாகவே செய்வதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்து பாராட்டி ஊக்குவித்தல் வேண்டும். இவற்றிற்கான பொருட்களை பிள்ளையின் அறையில் பிள்ளை எடுக்கக்கூடியவாறு பேணுதல் வேண்டும். இதைச்செய்யுமாறு கட்டாயப்படுத்தாது பிள்ளை விரும்பியதை எடுத்து சுதந்திரமாகச் செயற்படும் பழக்கத்தை ஏற்படுத்தல் வேண்டும். விளையாட்டு வாத்தியங்களை வீட்டிலுள்ளவர்கள் நேரமுள்ளபோது அழகாகச் செய்து பிள்ளையின்அறையில் வைத்தல் வேண்டும். பிள்ளை அவதானிக்கும் வகையில் பிள்ளையையும் ஈடுபடுத்தி விளையாட்டு வாத்தியங்களைச்செய்வது பொருத்தமானதாகும்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளின் உடல், உள ஆரோக்கியம் பேணி அறிவாற்றல் விருத்திக்கான பெறுமதியான சந்தர்ப்பங்களை வழங்கி பூரணமனிதனிற்குரிய தன்மைகளைப்பெற்று எதிர்காலத்தில் நல்லதொரு சமூகப்பிரஜையாக வாழ முழுமனதுடன் செயற்படுவீரகளென எதிர்பார்க்கிறேன்.

பிறரது நடத்தைகளைப் பின்பற்றி வாழும் பிள்ளைகளின் வாழ்வில் பெற்றோர், முதியோர்,குடும்பத்தவர், முன்பள்ளி ஆசிரியரின் பங்கு முக்கியம் வாய்ந்து.

# வீடு ஒரு பாடசாலையாக...

